PARAPARAPPU CHEITHI
Tamil Fortnightly

# பரபரப்பு செய்தி

மாதமிருமுறை இதழ்
புலனாய்வு இதழ்களில் புதிய பரிணாமம்
Volume : 27 ● Issue : 11 ● 2025 September 01-15 ● மலர் - 27 ● இதழ் - 11 ● 2025 செப்டம்பர் 01-15 ● ₹15

## தெருநாய் கடிக்கு தீர்வென்ன..?

## மதுரை வடக்கில் மல்லுக்கட்டும் வி.ஐ.பிக்கள்..!



# ஜோசப் விஜய் ஜொலிப்பாரா? சோலியைப் பார்ப்பாரா?



# பா.ஜ.க. நக்கல்..!



# எடப்பாடிக்கு சிக்கல்..!



# தி.மு.க.வுக்கு விக்கல்..!

டாடி டாடி... ஓ மை டாடி... உன்னைக் கண்டாலே ஆனந்தமே... என பக்கத்து வீட்டு தொலைக்காட்சியில் ஒலிக்க, ஓ அங்கிள்.. அங்கிள் அங்கிள்.. ஓ அங்கிள்... நான் உங்கள் வீட்டுப் பிள்ளையே என எதிர் வீட்டு டிவி அலறிக் கொண்டிருக்க, காதுகளைப் பொத்திக் கொண்டு கடுப்புடன் அலுவகலத்திற்குள் நுழைந்த அலெர்ட்டாரை கூல் செய்ய தர்பூஸ் ஜுஸை நீட்டினோம்.



# 'அலெர்ட்' ஆறுமுகம்

ஆசுவாசமான அலெர்ட்டாரிடம், உங்களுக்கு பிடிச்சது டாடி பாட்டா.? அங்கிள் பாட்டா.? எனக் கேட்டதும், அட அதை விடுங்க. டாடியை டேமேஜ் ஆக்கும் அரசியலை சொல்கிறேன் கேளும் என ஆரம்பித்தார்.

மதுரை த.வெ.க மாநாட்டில் விஜய், தி.மு.க மீதான அந்த அட்டாக்கை கூர்மைப்படுத்தி இருக்கிறார். அதனால் தான் அவர் முதல்வராக இருக்கும் ஸ்டாலினை அங்கிள்... அங்கிள் என வார்த்தைக்கு வார்த்தை உச்சரித்தார். அப்படி அவர் பேசிய தொனி ஸ்டாலினுடைய இமேஜை பாதிக்கும். இப்போது தி.மு.க கூட்டணிக்கு மிகப்பெரிய பலமாக, முகமாக இருப்பது ஸ்டாலின் மட்டுமே. அந்த இமேஜ மையப்படுத்தித்தான் இப்போது ஒட்டுமொத்த தி.மு.க கூட்டணியில் எலெக்சன் ஃபைட்டிங் மிஷினரி என்ற கட்டமைப்பு உருவாகி இருக்கிறது.

ஸ்டாலினுடைய இமேஜுக்கு எந்தவிதமான ஒரு பாதிப்பும் வந்து விடக்கூடாது. அவருக்கு கீழே இருக்கிறவர்கள் யார், எந்த தப்பு செய்தாலும், அவர்களுக்கு எந்தப் பிரச்சனை வந்தாலும் அது எந்த விதத்திலும் மு.க.ஸ்டாலினை பாதிக்கக் கூடாது என்கிற அளவில் அவரை நிலைநிறுத்தி வருகிறார்கள். அதனால்தான் அவருக்கு அந்த அப்பா என்ற ஒரு ஸ்தானத்தை நிறுவ முயற்சிக்கிறார்கள். ஃபாதர் ஃபிகர் என்கிற ஸ்தானத்தில் அவரை கொண்டு போய் நிறுத்தி இருக்கிறார்கள். இந்த பிம்பத்தைத்தான் விஜய் உடைக்கிறார்.

விஜய் ஏன் அந்த பிம்பத்தை உடைக்க வேண்டும் என்று கேட்கலாம். காரணம், பெண்களுடைய வாக்குகளும், ஆதரவும் தற்போது இரண்டு கட்சிகளுக்கு அதிகமாக இருக்கிறது. தி.மு.க பெண்களுடைய வாக்குகளை பெற வேண்டும் என்பதற்காக கடந்த காலங்களில் செய்திருக்கக்கூடிய பல்வேறு திட்டங்கள் மூலமாக அந்த வாக்கு வங்கியை அவர்கள் பக்கம் திருப்பி இருக்கிறார்கள். பெண்களுடைய வாக்குகள் எல்லாம் முதலில் பெரும்பான்மையாக அ.தி.மு.கவுக்கு செல்லும். ஆனால், ஜெயலலிதாவின் மறைவுக்கு பிறகு அந்த வாக்குகள் எல்லாம் தி.மு.க பக்கம் திரும்பி இருக்கிறது.

அதற்கு மிக முக்கியமான காரணம் அரசாங்க ரீதியாக தி.மு.க பெண்களை மையப்படுத்தி கொண்டு வந்திருக்கக்கூடிய திட்டங்கள். இப்போது அந்த இடத்தில்தான் ஒரு அப்பா ஸ்தானத்திலிருந்து ஸ்டாலின் மக்களுக்கு செய்கிறார் என்பதைப்போல காட்டிக் கொள்ள முயற்சிக்கிறார்கள். அந்த பிம்பத்தைத்தான் விஜய் உடைக்க திட்டமிடுகிறார். இதை செய்தால் மட்டும் அப்பா பிம்பம் கொண்டு வருவது மிகவும் சிரமமான ஒரு விஷயம் என்பது விஜய்க்கு தெரிந்திருக்கிறது.

இந்தப் பக்கம் அ.தி.மு.க பா.ஜ.க கூட்டணியை விமர்சித்துப்பேசி அங்கிருந்து வாக்குகளை பெறுவது எளிமையான விஷயமாக இருக்கலாம். ஆனால், தி.மு.கவுடைய வாக்குகளை எப்படி உடைப்பது என்கிற எண்ணத்தில்தான் தற்போது விஜயின் கவனம் முழுமையாக இருக்கிறது. அதுமட்டுமல்ல. அடுத்து வரக்கூடிய நாட்களில் விஜய், மு.க.ஸ்டாலினை நேரடியாக சந்திக்க திட்டமிட்டுள்ளார். எந்தெந்த பிரச்சனைகளில் உங்களுடைய அரசாங்கம் தவறு செய்திருக்கிறது? எந்தெந்த விஷயங்களை நீங்கள் செய்ய வேண்டும்? என்கிற கோரிக்கை மனுவோடு ஸ்டாலினை சந்தித்த பிறகு தி.மு.க அரசின் மீதான தாக்குதலை விஜய் மேலும் தீவிரப்படுத்துவார். இன்னும் கூர்மையாக அட்டாக் செய்வார் என த.வெ. கவினர் கூறுகிறார்கள் என்ற அலெர்ட்டார், அ.தி.மு.கவை நெறுக்கும் பா.ஜ.க விவகாரம் தெரியுமா? என விடாமல் தொடர்ந்தார்.

அ.தி.மு.கவிடம் முதல் கட்ட தொகுதி பட்டியலை பா.ஜ.க கொடுத்திருக்கிறது. அமித்ஷாவே தேர்வு செய்த 16 தொகுதிகளை பார்த்து அ.தி.மு.க அதிர்ச்சி அடைந்துள்ளது. திருநெல்வேலியில் நடந்த பா.ஜ.க பூத் கமிட்டி மாநாட்டுக்கு வந்த அமித்ஷா பா.ஜ.க நிர்வாகிகளுடன் 2026 தேர்தலை பற்றி விரிவாக விவாதித்தார். அப்போது அ.தி.மு.கவிடம், பா.ஜ.க போட்டியிடும் தொகுதி பற்றி முக்கியமான ஆலோசனை நடத்தியுள்ளார். இதில் தமிழ்நாட்டில் இருக்கும் பிரபலமான கோவில் நகரங்களை உள்ளடக்கிய தொகுதிகளை அ.தி.மு.கவிடம் இருந்து கேட்டு பெற வேண்டும் என அமித்ஷா உத்தரவிட்டுள்ளார். அவரது ஆலோசனைப்படி பிரபலமான கோயில்கள் அடங்கிய 16 தொகுதிகளுடன் பட்டியலை அ.தி.மு.கவிடம் பா.ஜ.க கொடுத்துள்ளது.

அந்த லிஸ்டு பழனி, திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், திருத்தனி ஸ்ரீவில்லிபுத்தூர், கும்பகோணம், ஸ்ரீரங்கம் என்று நீள்கிறதாம். இதில் பெரும்பாலானவை அ.தி.மு.க செல்வாக்காக இருக்கக்கூடிய தொகுதிகள் என்பதால், என்ன செய்வது என புலம்பலை ஆரம்பித்துள்ளது



விஜய்



அண்ணாமலை

அ.தி.மு.க தலைமை என்றார் அலெர்ட்டார்.

மறுபடியும் தி.மு.க த.வெ.க மேட்டர்தான்.. சொல்லட்டுமா? என நமட்டு சிரிப்புடன் விஷயத்துக்கு வந்த அலெர்ட்டார், தி.மு.கவின் முப்பெரும் விழா மாநாட்டு அன்று, விஜய் ஒரு ஷாக் கொடுக்கப் போகிறார். தேர்தல் வரை தி.மு.கவை எதிர்த்து எப்படி அரசியல் செய்வது என்று சில முக்கியமான முடிவுகளை எடுத்திருக்கிறாராம் விஜய். தனக்கு எதிராக தி.மு.க எடுத்த சில அரசியல் அஸ்திரங்களை, இப்போது அதே பாணியில் தி.மு.கவுக்கு எதிராக விஜய் எடுக்க உள்ளார்.

கரூரில் அடுத்த மாசம் 17ஆம் தேதி தி.மு.க முப்பெரும் விழா நடத்தப் போகிறது. அதே நாளில் விஜய்யும் ஒரு நிகழ்ச்சியை ஒருங்கிணைக்க இருக்கிறார். ஏற்கனவே அம்பேத்கர் புத்தக வெளியீட்டு விழாவை தமிழ்நாடு முழுவதும் பேச வைத்த விஜய், வரும் செப்டம்பர் 17ல் பெரியார் புத்தக வெளியீட்டு விழாவிற்கு தேதி கொடுத்துள்ளார். அம்பேத்கர் புத்தகத்தை வெளியிட்ட பிரபல வார இதழ் நிறுவனமே பெரியார் புத்தகத்தையும் வெளியிடப் போகிறது. இதில் பெரியார் புத்தகத்தை விஜய் வெளியிட, அதைப் பெற்றுக் கொள்ளப் போவது யார்? என்பதுதான் இப்போது சஸ்பென்ஸ்.

அம்பேத்கர் புத்தகத்தை விஜய் வெளியிட, திருமாவளவன் பெற்றுக் கொள்வதாகத்தான் அப்போது ஏற்பாடானது. ஆனால் திருமாவளவன் வரவில்லை. அம்பேத்கரின் பேரன் புத்தகத்தை பெற்றுக் கொண்டார். பெரியார் புத்தகத்தை விஜய்யிடம் பெற்றுக் கொள்ளப் போகும் நபரை பரிசீலித்து வருகிறது விஜய் தரப்பு. இந்த புத்தக வெளியீட்டு விழாவில் தி.மு.கவுக்கு எதிரான விஜய்யின் விமர்சனங்கள் கடுமையாக இருக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள்.என்ற அலெட்டாரிடம், அண்ணாமலை, எடப்பாடி பழனிசாமியை முதலமைச்சராக்காமல் ஓயமாட்டேன் என்று சொல்லி இருக்கிறாரே? என்றோம்.

சில மாதங்களுக்கு முன்பு கூட்டணி ஆட்சியா? என்று கேட்டதற்கு, அமித்ஷா சொல்லாததை நான் சொல்ல முடியாது என்றவர் அண்ணாமலை. இப்போது உல்டாவாக மாறி இருக்கிறார். அண்ணாமலை சொல்வதைப் பார்த்தால் அது நக்கலோ என்ற சந்தேகம்தான் வருகிறது. திடீரென்று இவராக எடப்பாடி பழனிச்சாமியை முதலமைச்சராக்கும் வரை நாம் ஓயக்கூடாது என்கிறார். இது ஒரு வரவேற்கத் தகுந்த கருத்தாக இருந்தாலும்கூட, எடப்பாடி பழனிசாமி எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பா.ஜ.க, ஏதோ பிளான் செய்கிறது. எடப்பாடி பழனிச்சாமி தான் கவனமாக இருக்க வேண்டும்.

அமித்ஷாவே அதை சொல்ல மறுக்கிறபோது. சில மாதங்களுக்கு முன்னாள் எடப்பாடியை விமர்சித்த அண்ணாமலை அண்ணன் எடப்பாடி பழனிசாமியை முதலமைச்சராக்கி விடுவேன் என்கிறார். அதைச் சொல்ல வேண்டிய அமித்ஷா மௌனமாக இருக்கிறார். கடுமையாக விமர்சித்த அண்ணாமலை இப்படி சொல்கிறார் என்றால் ஏதோ நம்ப வைத்து கழுத்தை அறுக்க போகிறார்களோ? என ஒரு அ.தி.மு.க தொண்டன் நினைப்பானா? இல்லையா? இவ்வளவு தூரம் பேசுகிறீர்களே ஜி, என் பெயரை ஏன் சொல்ல மறுக்கிறீர்கள்? என்று அமித்ஷாவிடம் நேரடியாகவோ, தனது தூதர் மூலமாகவோ எடப்பாடி பழனிச்சாமி கேட்டிருக்க வேண்டும். இனிமேலாவது கேட்க வேண்டிய நேரம் அவருக்கு வந்துவிட்டது எனச் சொல்லி முடிக்க, தெருவில் இருந்து, தாமரை இலை மேல் நீர் போல் நீ ஒட்டியும் ஒட்டாமலிரு... பாடல் ஒலிக்க, தலையிலடித்தபடி விருட்டென நடையைக் கட்டினார் அலெர்ட்டார். ■

## திருப்பத்தூர் தொகுதி

# யாருக்கு சீட்டு..? யாருக்கு வேட்டு..?

# மாஜியின் மாஸ்டர் ப்ளான்..!

# திருப்பதி க்கே திருப்பத்தூர் ..?

**2026 ல் சட்டமன்ற பொது தேர்தல் வருவதால், தான் பார்த்து பார்த்து செதுக்கிய ஜோலார்பேட்டை தொகுதியை, கடந்த 7 மாதங்களாகவே வலம் வர ஆரம்பித்துவிட்டார் மாஜி மந்திரி வீரமணி. அ.தி.மு.க மட்டுமல்லாது பிற கட்சியினர் நடத்தும் நிகழ்ச்சிகளிலும் கலந்துக் கொண்ட மாஜி வீரமணிக்கு, சென்னை உயர்நீதிமன்றத்தால் அதிர்ச்சி வைத்தியம் கொடுக்கப்பட்டது.**

2021 சட்டமன்றத் தேர்தலின் போது தாக்கல் செய்யப்பட்ட தேர்தல் பிரமாணப் பத்திரத்தில், வெளிநாடுகளில் வாங்கிய சொத்துக்களை மறைத்து வைத்திருந்ததாகவும், தேர்தல் பிரமாணப் பத்திரத்தில் தவறான பான் எண்களை கொடுத்துள்ளதாகவும் தேர்தல் ஆணையம் கூறியதையடுத்து, முன்னாள் அ.தி.மு.க அமைச்சர் கே.சி.வீரமணி மீது இந்திய தேர்தல் ஆணையம் (ணிசிமி) தொடர்ந்த குற்றவியல் வழக்கு திருப்பத்தூர் நீதிமன்றத்தில் நடைபெற்றது வருகிறது, அந்த வழக்கை. ரத்து செய்து தடை விதிக்கக் கோரியும், விசாரணைக்கு நீதிமன்றத்தில் ஆஜராவதிலிருந்து விலக்கு அளிக்கக் கோரியும், மாஜி வீரமணி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தார். அந்த மனு மீது கடந்த ஜூலை 18 ந்தேதி அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி வேல்முருகன், முன்னாள் அமைச்சர் கே.சி வீரமணியின் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார். அந்த வழக்கில் பின்னர் விரிவான உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றும் நீதிபதி உத்தரவில் குறிப்பிட்டிருந்தார்.

அதனால், இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளப்பட்ட மாஜி வீரமணி 2026 தேர்தலில் போட்டியிட முடியாத சூழல் உருவாகியுள்ளது, அப்படி ஒரு சூழல் வந்ததால். ஜோலார்பேட்டையில் அவரது அண்ணன் கே.சி.அழகிரி அல்லது அவரது மகனை களம் இறக்க முடிவு செய்துள்ளார் என்கிறார்கள் ரத்தத்தின் ரத்தங்கள்.

இந்நிலையில் கடந்த 13ஆம் தேதியன்று திருப்பத்தூர் தொகுதியில் தேர்தல் சுற்றுப்பயணத்தில் ஈடுபட்ட எடப்பாடி பழனிச்சாமி, மாஜி வீரமணிக்கு ஒரு கண்டிசன்

கே.சி.வீரமணி



போட்டுள்ளார். ஜோலார்பேட்டை தொகுதி கூட்டணி கட்சிக்கு ஒதுக்கப்பட்டாலும் அவர்களை வெற்றி பெற வைக்க வேண்டும். அதே சமயம், என்ன பன்னுவியோ தெரியாது. திருப்பத்தூரில் அ.தி.மு.க வெல்ல வேண்டும் என்றாராம். அதனாலதான், தி.மு.க கோட்டையான

திருப்பத்தூரை வென்று, திருப்பத்தூரில் திருப்புமுனையை ஏற்படுத்துவேன் என பிரச்சாரத்தில் ஈடுபட்ட எடப்பாடி பழனிச்சாமி முன்னிலையில் மாஜி வீரமணி சபதமேற்றதாக கூறுகின்றனர்.

அதே, வேளையில் மாஜி அமைச்சர் வீரமணி தேர்தலில் நிற்க முடியாமல் போனால், திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள திருப்பத்தூர், ஜோலார்பேட்டை , வாணியம்பாடி, ஆம்பூர் ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளின் வெற்றிக்கு உழைக்க வேண்டும் என்றும், வேலூர். ராணிப்பேட்டை, மாவட்டங்களில் உள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளையும் அ.தி.மு.க வென்று எடுக்க வேண்டும் என்று எடப்பாடி பழனிச்சாமி உத்தரவிட்டுள்ளாராம்.

மேற்குறிப்பிட்ட மூன்று மாவட்ட சட்டமன்ற தொகுதிகளில் பிரச்சாரத்தில் ஈடுபட்ட எடப்பாடி பழனிச்சாமி சூராவளி பயணம் மாஜி மந்திரி வீரமணி ஆலோசனைபடியே நடந்து முடிந்துள்ளதாம். மூன்று மாவட்டங்களில் உள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளையும் அ.தி.மு.க கைப்பற்றி, தனது ஆளுமையை நிருபித்துவிட வேண்டுமென்ற கட்டாயததிற்கு மாஜி தள்ளப்பட்டுள்ளாராம்.


திருப்பதி


டி.டி.குமார்


டி.டி.சங்கர்

திருப்பத்தூர்தொகுதி கள நிலவரமறிய, தலைமைக்கு நெருக்கமான சிலரிடம் பேசினோம்.

அப்போது அவர்கள்,

கால்நடை மருத்துவரான டாக்டர் திருப்பதி, ஒன்றிய சேர்மனாக இருந்தவர். தற்போது ஒன்றிய செயலாளராக இருக்கும் அவர், வசதி வாய்பில் வளர்ந்து நிற்பவர். அடாவடி, கட்டப் பஞ்சாயத்தில் சிக்காத, ஆர்ப்பாட்டமில்லாத அரசியல்வாதியாக வலம் வருகிறார். எடப்பாடி பழனிச்சாமி சமூகமான வெள்ளாளர் சமூகத்தை சேர்ந்தவர். இந்த சமூகத்தினர் தொகுதி முழுவதும் கணிசமாக நிறைந்துள்ளனர். தொகுதியில் இவரை அறியாதவர்கள் இல்லை. கொடுக்கும் தொகையை பெற்றுக் கொண்டு ஒரு சேவையாகவே கால்நடைகளுக்கு மருத்துவம் பார்த்து வருகிறார். மாற்று கட்சியினர் மத்தியிலும் நற்பெயரைக் கொண்டவர். 40 வருட அ.தி.மு.க விசுவாசி. பலமுறை சீட் கேட்டு மறுக்கப்பட்டவர். தனது தலைவர் எம்.ஜி.ஆர் எப்படி மூகாம்பிகை கோயிலுக்கு சென்று அரசியலில் வெற்றி வாகை சூடி வந்தாரோ, அதே வகையில் திருப்பதியும் அடிக்கடி மூகாம்பிகை கோயிலுக்கு சென்று வருகிறார்.

சமீபகாலமாக தொகுதிகளில் நடக்கும் நல்லது கெட்டது போன்ற நிகழ்வுகளில் மாஜி இல்லை என்றாலும், அழையா விருந்தாளியாக பங்கெடுத்து வருகிறார். தற்போதைய திருப்பத்தூர் எம்.எல்.ஏ திருப்பதிதான் என சொல்லும் அளவுக்கு தொகுதி மக்களிடம் பரிச்சயமானவர். கட்சி நிர்வாகிகளோடு களத்தில் நிற்பவர். அன்பானவர். அடக்கமானவர். ஆர்பாட்டமில்லாத எங்க டாக்டருக்கு தான் இந்த முறை சீட். அதை மேலிடமே உறுதி செய்துவிட்டது என்கிறார்கள், எம்.ஜி.ஆர் விசுவாசிகளான ரத்தத்தின் ரத்தங்கள்.

அவரைத் தொடர்ந்து, மாஜியின் பினாமியான டி.டி.சங்கர், 2016ல் ரஜினி மன்ற

நிர்வாகியாக இருந்தவர் . மாஜி வீரமணி ஆசியோடு அ.தி.மு.கவில் ஐக்கியமாகி, மாவட்ட பாசறை செயலாளர், நகரத்தில் வார்டு கவுன்சிலர், சமீபத்தில் கந்திலி கிழக்கு ஒன்றிய செயலாளராக்கப்பட்டவர். இப்படி எல்லா வகையிலும் கிடு கிடுவென உயர்ந்தார் டிடி.சங்கர், அகமுடையார் சமூகத்தை சேர்ந்தவர்.

நகரத்தை தவிர்த்து சுற்றியுள்ள பகுதிகளில் வன்னியர்கள், வெள்ளாளர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என நிறைந்த இந்த தொகுதிக்கு தெரியத முகமாகவும் இருக்கிறார். வீரமணியின் கட்டுபாட்டில் இருப்பதால் சீட்டு நிச்சயம் என்கிறார்கள் அவரது ஆதரவாளர்கள். சங்கருக்கு சீட் வழங்கினால் தோற்பது நிச்சயம். தி.மு.க சுலபமாக வெற்றி பெறும் என்கிற குரல்களும் ஓங்கி ஒலிக்கிறது,

மேலும், சம்பந்தமே இல்லாத ஒன்றியத்தில் இவரை செயலாளராக்கிய மாஜி மீது கோபத்தின் உச்சிக்கே சென்ற கந்திலி கிழக்கு ஒன்றிய அ.தி.மு.கவினர் பலர், கடந்த 20ஆம் தேதி . தி.மு.கவுக்கு தாவி, மாஜிக்கு பயத்தை காட்டியுள்ளார்கள்.

அடுத்ததாக, திருப்பத்தூர் தொகுதியை குறித்து காய்நகர்த்தி வருபவர் டி.டி.குமார். இவரும், மாஜிக்கு நெருக்கமானவர்தான். 2011 ல் வேட்பாளராக களம் கண்டு தி.மு.கவிடம் தோல்வியடைந்த டி.டி.குமார். அப்பா அம்மா வெவ்வேறு சமூகத்தினர் என்று கூறப்படுகிறது, சமீபத்தில் பள்ளி மாணவன் இறப்பில் நீதி கேட்டு தெருவில் இறங்கி அதிரடி காட்டியவர். ஆனால், கோடிகளை வாரி இறைக்கும் அளவுக்கு வசதி தற்போது கைவிட்டு போய்விட்டது. அவரை வளர்த்த ராகவேந்திரா டி.வி சென்டர், பொருளாதார விசயத்தில் வீக் ஆகி பிசினஸை அடியோடு புதைத்துவிட்டார். செலவு செய்து வெற்றி பெறும் அளவுக்கு அவரிடம் பணமும்மில்லை, செலவு செய்ய மாஜிக்கு மனசுமில்லை என்கின்றார்கள்.



ரவிக்குமார்

இவர்களைத் தவிர, வழக்கறிஞர் ரவிக்குமார், முன்னாள் நகர்மன்ற தலைவி லீலாவின் கணவர் சுப்ரமணியமும் களத்தில் இருக்கின்றனர்.

மாஜியின் குட்புக்கில் இருக்கும் டாக்டர் திருப்பதி, டி.டி.குமார். டி.டி.சங்கர் மூவரில். திருப்பதி அல்லது சங்கரை சாய்ஸாக வைத்துள்ளாராம் மாஜி வீரமணி. அதிலும் மாஜியின் ஆசிர்வாதத்தோடு, திருப்பத்தூர் திருப்பதிக்கே என்கின்றனர் தலைமைக்கு நெருக்கமானவர்கள்.

மாஜி வீரமணியே களத்தில் இறங்குவதால், தி.மு.க கோட்டையில் தொடர்ந்து இரண்டுமுறை வெற்றி வாகை சூடிய எம்.எல்.ஏ நல்லதம்பி, மூன்றாவது முறை வென்று, மந்திரி ஆகிவிடலாம் என இருப்பவருக்கு, இந்த தேர்தலில் வெற்றி எளிதாக கிட்டாது என்கின்றனர். ■

சூறாவளி பயணத்தில் எடப்பாடி




## அடுத்த பாய்ச்சல்..!

பரபரப்பு செய்தி இதழைத் தொடர்ந்து நமது அடுத்த அத்தியாயமாக **www.tamil.paraparappucheithi.com** என்கிற இணையதள மின்னிதழிலும் நாம் தடம் பதித்துள்ளோம். ஆகவே நமது இதழில் அங்கம் வகித்துவரும் தோழர்கள் இணையதள பக்கத்திற்கும் செய்திகளை வழங்கிட வேண்டுகிறோம். தாங்கள் வழங்கும் செய்திகள் உடனடியாக வாசகர்களையும், செய்திக்கு சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகள், அதிகாரிகள், காவல்துறையினர், சமூக ஆரவலர்கள் உள்ளிட்ட செய்திக்கு சம்பந்தப்பட்டவர்கள் மற்றும் வாசகர்களுக்கு சுடச் சுட சென்று சேரும்.

இணையதள செய்தியின் வீச்சு பரவலானது, உடனடியாக சென்று சேரக்கூடியது. ஆகையால் பரபரப்பான தகவல்களை விறுவிறுப்பான நடையில் எழுதி நமது வாட்ஸ் அப் குழுவில் அனுப்பினால் அதனை நமது குழுவினர் உடனடியாக நமது இணையதளத்தில் பதிவேற்றுவார்கள். சமூகம், அரசியல், விவசாயம், ஆன்மீகம், குற்றம், வினோத செய்திகளை தாங்கள் எழுதி அனுப்பலாம்.



ஈரோடு

யுவபாரதி

# கொள்ளை போகும் கனிமவளம்... சூறையாடப்படும் விளைநிலங்கள்...

## ● குறட்டை விடும் தமிழக அரசு

**ஈரோடு மாவட்டம் முழுவதும் வேளாண்மை தொழில் நிறைந்த விவசாய நிலங்களே அதிகம், சத்தியமங்கலம், கோபி,.பவானி, அந்தியூர் ஒட்டிய பகுதிகளில் வனத்துறை நிலங்கள் அதிகம். அதேநேரத்தில் அதிகாரிகளின் ஆசியுடன் கனிமவள கடத்தலும் வெகு ஜோராக நடைபெறுகிறது.**

மேலிட ஆதிக்க செல்வாக்கால் மயிலாடுதுறை ராஜப்பா உத்தரவில், ஈரோடு மாவட்ட கனிம வளத்துறை உதவி இயக்குனர் கனிமவள கடத்தலுக்கு முறையான ஆவணங்கள் ஏதுவும் இன்றி ஆன்லைன் பர்மிட் வழங்கி வருகிறார். இந்த ஆன்லைன் பர்மிட்கள் ஈரோடு மாவட்ட கனிமம் மண் கடத்தல் கில்லாடியும், முன்னாள் அமைச்சர் கே.சி.கருப்பண்ணனின் நெருங்கிய உறவினரும், ஈரோடு அ.தி.மு.க இளைஞரணி செயலாளருமான பவானி கார்த்தி மற்றும் அன்னூர் பழனிச்சாமி ஆகியோர் மேற்பார்வையில் கனிமம் மற்றும் மண் இரவு, பகல் பாராமல் கடத்தப்படுகிறது .

பெயருக்கு ஒரு சில ஆன்லைன் பர்மிட் வைத்துக் கொண்டு, பர்மீட்டில் குறிப்பிட்ட பட்டா, சர்வே இடத்தில் மட்டுமின்றி, அரசு புறம்போக்கு இடம், வனத்துறை இடம் மற்றும் வேறு வேறு பட்டா இடங்களில் கனிமமும், மண்ணும் கட்டுப்பாடு இன்றி வெட்டி எடுக்கப்பட்டு வருகிறது.

பர்மிட்டு அனுமதியில் குறிப்பிட்ட இடத்திற்கு மட்டுமன்றி அருகே உள்ள மாவட்டங்கள், அண்டை மாநிலங்களுக்கு என தினம் தோறும் நூற்றுக்கணக்கான லோடு கனிமம் மற்றும் மண் லோடுகள் சர்வ சாதாரணமாக கடத்தப்பட்டு வருகிறது.

மயிலாடுதுறை ராஜப்பா தலைமையில் கனிமம் மற்றும் மண் கடத்தல் தொடங்கிய சில மாதங்களிலே இவ்வளவு லோடு கனிமங்கள் கடத்தப்படுகிறது என்றால், போகப் போக எவ்வளவு அளவு கனிமம் , மண் லோடுகள் கடத்தல் அதிகரிக்கும் என சமூக ஆர்வலர்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

மேலும், கனிமம் வளத்துறையினர், காவல் துறையினர், வருவாய் துறையில் கிராம உதவியாளர், வருவாய் ஆய்வாளர், தாசில்தார், கோட்டாட்சியர் என அனைத்து அதிகாரிகளுக்கும் மயிலாடுதுறை ராஜப்பா மூலம் மாத மாமூல் நிர்ணயம் செய்யப்பட்டு, மாதம் தோறும் முறையாக கொடுக்கப்படுவதால். பொதுமக்களோ, சமூக ஆர்வலர்களோ கனிமம் கடத்தல் குறித்து புகார் தெரிவித்தால் அதிகாரிகளோ, காவல்துறையினரோ, கனிமவளத்துறையினரோ கண்டு கொள்வதில்லையாம்.

இதுகுறித்து குறித்து நம்மிடம் பேசிய சமூக ஆர்வலர் ஒருவர், கடந்த சில ஆண்டுகளாக புதுக்கோட்டை டீம் எஸ்.ஆர் என்ற எஸ்.ராமச்சந்திரன், கனிம வளத்துறை அதிகாரிகள் மற்றும் காவல் துறைகளை தனது கட்டுப்பாட்டில் வைத்து கொண்டு இரவு பகலாக கனிமம் கடத்தி கோடிக்கணக்கில் வருமானம் பார்த்து வந்தார்கள். அவர்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக, மத்திய அரசின் அமலாக்கத்துறையினரின் அதிரடி ரைடில் அதிர்ந்து போன எஸ்.ஆர் குரூப், கனிமம் திருட்டில் இருந்து முற்றிலுமாக விலகி விட்டது.

தமிழகம் முழுவதும் விவசாய நிலங்களை கூறு போட்டு கனிமம்,மண் கடத்திய பிரபல தாதா புதுக்கோட்டை எஸ். ராமச்சந்திரன் காலம் முடிந்துவிட்டதால், சமூக ஆர்வலர்கள் நிம்மதி





பெருமூச்சுவிட, அந்த நிம்மதிக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக, இனி நான் தான் கனிமம் கடத்தலுக்கு ராஜா என்று மார்த்தட்டிகொண்டு கடத்தலில் களம் இறங்கி உள்ளார் மயிலாடுதுறை ராஜப்பா.



ராஜப்பா



பவானி கார்த்தி

சென்னையில் ஓம் சக்தி புரோமோட்டர்ஸ் என்ற நிறுவனம் நடத்தி வரும் மயிலாடுதுறை ராஜப்பா, ஆளும் தலைமையின் மகள் குடும்பத்தின், மருமகனான டாக்டர் ஒருவரின் நெருக்க மூலம், ஆட்சி அதிகாரத்தில் நெருங்கியுள்ளார் நெருக்கத்தை பயன்படுத்திக் கொண்டு அதற்கான முன்னேற்படாக தமிழகம் முழுவதும், முதலில் சட்ட விரோதமாக கிராவல் மற்றும் சவுடு மண் எடுப்பதற்கு (கடத்துவதற்கு) அவருக்கு அனுமதி கிடைத்துள்ளது.

மயிலாடுதுறை ராஜப்பா தமிழகத்தின் பல இடங்களில் கிராவல் (கடத்தல்) தொழிலை நடத்தி அதன் மூலம் வரும் வருமானத்தை மேலிடத்திற்கும், கட்சி நிர்வாகிகளுக்கும், அனைத்து தரப்பு அதிகாரிகளுக்கும் பிரித்து கொடுக்க வேண்டும் என்பது அசைன்மென்ட் ஆகும். மண் கடத்தல் கில்லாடி பவானி கார்த்தி மூலம் அருகே உள்ள வனத்துறை இடத்திலும் பல அடி ஆழத்திற்கு மண் தோண்டப்பட்டு, ஆயிரக்கணக்கான மண் லோடுகள் சர்வசாதாரணமாக கடத்தப்பட்டுவருகிறது.

ஈரோடு மாவட்டம் கோபியை சுற்றியுள்ள பகுதிகள் வேளாண்மை நிறைந்த பகுதியாகும் , இந்த பகுதியில் பல இடங்களில் விவசாயம் செய்ய முடியாமல் தவிக்கும் குடும்பத்தினரை பயன்படுத்தி, பல கோடி மதிப்பிலான கனிமங்களை வெட்டி கடத்தி பல கோடி சம்பாதித்த நபர் தான் மண் கடத்தல் கில்லாடி பவானி கார்த்தி ஆவார். ஈரோடு, கோபி, அந்தியூர், பவானி, சத்தியமங்கலம், திங்களூர், பெருந்துறை, சென்னிமலை, அம்மாபேட்டை என ஈரோடு மாவட்ட அனைத்து பகுதிகளில், அரசு அனுமதி இன்றி அங்குள்ள சிறு குன்றுகள், குளம் குட்டைகள் மற்றும் விவசாய நிலங்களில் இருந்து இரவு நேரங்களில் மண் கடத்தி, சாலை ஓர பகுதிகளில் கொட்டிபாதுகாத்து பகல் நேரங்களில் ஆன்லைன் பர்மிட் மூலம் பல்வேறு பகுதிகளுக்கு மண் சர்வசாதாரணமாக கடத்தப்படுகிறது.

ஈரோடு மாவட்டத்தில் நடக்கும் கனிம வள கொள்ளை, கிராவல் குவாரி, கல்குவாரி முறைகேடுகள் சம்பந்தமாக, பல்வேறு புகார்கள் ஈரோடு மாவட்ட ஆட்சியர் மற்றும் கனிமவளத் துறைக்கு பல்வேறு புகார் மனுக்கள் தொடர்ந்து அனுப்பபட்டு வருகிறது. ஆனால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை. காரணம் மயிலாடுதுறை ராஜப்பாவின் செல்வாக்கு தானாம்.

மேலும், கடந்த சில மாதங்களுக்கு முன் கோபி கல்குவாரியில் நடந்த விபத்தில் இருவர் உயிரிழந்தனர். அந்த விவகாரம் தொடர்பாக கல் குவாரி உரிமையாளரைமட்டும் கைது செய்தனர். கிராம நிர்வாக அதிகாரி, வருவாய் ஆய்வாளர், தாசில்தார் ஆகியோரை கண்துடைப்புக்காக இடமாற்றம் மட்டும் செய்து விபத்து வழக்கை கிடப்பில் போட்டுவிட்டனர் என, அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

வேளாண்மை இடத்தில் மண் கடத்தும் கும்பலிடம் இருந்து அப்பாவி விவசாயிகளை காக்க, மண் கடத்தல் கும்பல் மீது கடுமையான நடவடிக்கை எடுத்தால் மட்டுமே, மண் கடத்தும் கும்பல் சற்று பயப்படுவார்கள். இல்லையென்றால் அதிக லாபம் என்பதால் ஒரு சில ஆண்டுகளிலே வேளாண்மை நிலைகளை பல அடி ஆழம் தோண்டி, விவசாயம் செய்ய முடியாத அளவிற்கு கொண்டு சென்று விடுவார்கள் என்பதுதான் யதார்த்தமான உண்மை.

இனியும் தமிழக அரசு விழித்து கொள்ளாவிட்டால், மயிலாடுதுறை ராஜப்பா தலைமையிலான மண் கடத்தும் கும்பல் தடையின்றி கனிமவளங்களை கடத்தி, தமிழக பகுதியில் உள்ள கனிமம் மற்றும் மண் வளத்தை கேரளா, கர்நாடகா, ஆந்திரா பகுதிக்கு தாரை வார்த்து விடுவார்கள்.

கனிமங்களின் அருமையும், விவசாயத்தின் பெருமையும் தெரியாமல் தி.மு.க ஆட்சியில் காசு, பணம், துட்டு, மணி.. மணி... என்று சர்வ அதிகாங்களுடன் ஈரோடு மாவட்டத்தில் கனிமவள கடத்தல் கும்பல் வனத்தையும், விவசாய நிலத்தையும் சீரழித்து கோடிகளில் புரல்கிறது.

இனியும் தமிழக அரசு விழித்து கொள்ளாமல் குறட்டை விட்டால், மயிலாடுதுறை ராஜப்பா தலைமையில் மண் கடத்தும் கும்பல் தடையின்றி மண் கடத்தி, தமிழக பகுதியில் உள்ள கனிமம் மற்றும் மண் வளத்தை கேரளா, கர்நாடகா, ஆந்திரா பகுதிக்கு தாரை வார்த்து விடுவார்கள் என்பதே நிதர்சனம். ■

பொள்ளாச்சி | நெப்போலியன்

# கோவில் நிலம் ஆக்ரமிப்பு... இடித்து தள்ள நீதிமன்றம் உத்தரவு...

## முட்டு சந்தில் மும்மூர்த்திகள்

**கோவை இந்து சமய அறநிலையத்துறை உதவி கமிஷனராக இருந்த ஒரு பெண் அதிகாரி சமீபத்தில் லஞ்சம் வாங்கி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அந்த சம்பவம் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் மிகவும் பரபரப்பாக பேசப்பட்டது.**

அந்த பரபரப்பு அடங்குவதற்குள் அதே அறநிலையத் துறையில் மற்றுமொரு மோசடி அம்பலமாகி, இந்து சமய அறநிலையத்துறை என்ற ஒன்று ஒழிக்கப்பட வேண்டும் என்கிற பா.ஜ.க வினரின் கூக்குரலை மக்கள் ஆதரிக்கும் நிலை வந்து விடுமோ என்று நடுநிலையாளர்களை அச்சப்பட வைத்துள்ளது மேற்படி சம்பவங்கள்.

கோவை மாவட்ட இந்து சமய அறநிலையத் துறையில் மேற்படி பெண் அதிகாரி போன்ற லஞ்ச அதிகாரிகளால் மாவட்டமெங்கும் அதிகளவில் கோவில் நிலங்கள் ஆக்கிரமிப்பு என்ற பெயரில் கொள்ளைபோய் கொண்டிருக்கிறது. அந்த வகையில் கோவை மாவட்டம் பொள்ளாச்சியிலும் கோவில் நிலம் தொடர்பான பெரிய மோசடி ஒன்று நடைபெற்று, அது நகர அ.தி.மு.கவினரின் சட்டப் போராட்டத்தால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. பொள்ளாச்சியில் இந்து அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள பிரசித்தி பெற்ற சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான இடம் தேர்முட்டி பகுதியில் உள்ளது. அந்த இடத்தை பொள்ளாச்சி வட்டம் அம்மேகவுண்டனூரைச் சேர்ந்த மளிகை பாஸ்கர், பந்தல் கணேஷ் மற்றும் நகை(வெள்ளி)கடை முருகன் ஆகிய மூன்று பேரும், பாஸ்கரின் உறவினராக சொல்லப்படும் மேற்படி இந்து சமய அறநிலையத்துறையில் உதவி



ஆக்கிரமிப்பு இடம்


சுப்ரமணியசாமி கோவில்

கமிஷனராக இருக்கும் ஒரு பெண் அதிகாரியின் உதவியுடன் குத்தகை அடிப்படையில் எடுத்துள்ளனர். அந்த இடத்தில் அசையும் வகையில் வண்டி வியாபாரம் அல்லது சிறிதளவான தற்காலிக செட் அமைத்து வியாபாரம் செய்ய ஆகியவற்றிற்கு மட்டுமே அனுமதி, அல்லாமல் பெரிய அளவில் கட்டிடங்கள் கட்டுவதோ அல்லது நிரந்தரமாக அசையா வண்ணம் எந்த ஒரு செயலையும் செய்ய கூடாது என்கிற நிபந்தனையுடன் மிகவும் சொற்ப தொகைக்கு மேற்படி கோவில் இடத்தை குத்தகைக்கு எடுத்த மூவரும் அந்த இடத்தில் பிரம்மாண்டமான முறையில் கடைகளைக் கட்டி, ஒவ்வொருவரிடமும் ரூபாய் பத்து லட்சம், பதினைந்து லட்சம் என்று பெற்று கொண்டு அவற்றை வாடகைக்கு விட்டுள்ளனர்.

அதற்காக மூவரும் சுப்பிரமணிய சுவாமி கோயில் இ.ஓ தேவிப்பிரியா உள்ளிட்டோருக்கு சுமார் இருபது லட்சம் ரூபாய் லஞ்சமாக கொடுத்துள்ளனராம். இந்த மகா மோசடியை நகர அ.தி.மு.க செயலாளர் கிருஷ்ணகுமாரின் அறிவுறுத்தலின் பேரில் கவுன்சிலர் ஜேம்ஸ் ராஜா கட்சி நிர்வாகியான சூரிய நாராயணன் என்பவர் பெயரில் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அந்த வழக்கில் தீர்ப்பு தற்போது வந்துள்ளது. அதில் சம்மந்தப்பட்ட கோவில் இடத்தில் கட்டப்பட்ட கட்டிடங்கள் எட்டு வாரத்திற்குள் முழுவதுமாக இடித்து அப்புறப்படுத்த வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பினால் கோவில் இடத்தை ஆட்டையைப் போட்ட மும்மூர்த்திகள் மற்றும் இ.ஓ தேவிப்பிரியா உள்ளிட்ட கோவில் ஊழியர்கள் என அனைவரும் ஆட்டம் கண்டு போயுள்ளனராம். பொள்ளாச்சி சுப்பிரமணிய சுவாமி கோயில் நிர்வாகத்தை பொருத்தவரை இந்த ஒரு சம்பவம் மட்டும் அல்ல இன்னும் ஏராளமான மோசடிகள் அரங்கேறி உள்ளன என்று கூறுகின்றனர் பக்த கோடிகள்.

மேற்படி மோசடிகளுக்கு முக்கிய



சேகர் பாபு



ஆணையர் ஸ்ரீதர்



இ.ஓ. தேவிபிரியா



4 of 6 WP No. 26908 of 2025

WEB COPY

as to whether any encroachment has been made in the temple land of Arulmigu Subramania Swami Thirukovil. In such an event, action shall be initiated and the encroachment shall be removed in accordance with law after affording an opportunity to all the interested parties. This process shall be completed, within a period of eight weeks from the date of receipt of copy of this order.

5.This writ petition is disposed of with the above directions. No Costs. Consequently, connected miscellaneous petition is closed.

24-07-2025

Index:Yes/No
Speaking/Non-speaking order
Internet:Yes
Neutral Citation:Yes/No
ssr

https://www.mhc.tn.gov.in/judis

கோர்ட் உத்தரவு

காரணமாக, இக்கோவிலில் நீண்ட காலமாக இருந்து வரும் அண்ணன் தம்பிகளான பாலமுருகன் மற்றும் விஜயகுமார் ஆகியோரை குறிப்பிடுகின்றனர். அவர்களது முறைகேடுகள், மோசடிகள் குறித்து எழுத வேண்டுமானால் நிச்சயம் இந்த ஒரு இதழ் போதாது. ஆகவே, ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்கிற ரீதியில் ஒரு சம்பவத்தை மாத்திரம் பார்ப்போம்.

அதாவது, கோவிலின் முன் வாகனங்கள் நிறுத்தும் இடத்தை வேட்டைக்காரன் புதூர் மணி என்பவர் ஐந்து லட்சம் ரூபாய்க்கு ஏலம் எடுத்து நடத்தி வந்திருக்கிறார். அதில் பாலமுருகன் மற்றும் விஜயகுமாருக்கு மணி முறையாக கமிஷன் கொடுத்தும் போதாமல், வேண்டுமென்றே இருவரும் அவருடன் சண்டை போட்டு தொடர்ந்து அவரை ஏலம் எடுக்க விடாமல் அடாவடி செய்துள்ளனர். அவரும் இந்த துன்பமே வேண்டாம் என ஒதுங்கி மூன்று வருடங்கள் ஆகிவிட்ட நிலையில், அதனால் கோவிலுக்கு வருடம் ஐந்து லட்சம் ரூபாய் வீதம் மூன்று வருடத்திற்கு பதினைந்து லட்சம் ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டிருப்பதாக கூறுகின்றனர். இது தவிர இன்னும் பல மோசடி சம்பவங்கள் நடந்து வருவதாக பக்தர்கள் நம்மிடம் தந்த பட்டியல் ரொம்பவும் நீளமானது என்பதால் அனைத்தையும் ஒவ்வொன்றாக சாவகாசமாக அசை போடுவோம் வரும் இதழ்களில்.

அதற்கு முன் கோவிலே காணாமல் போனாலும் கண்டு கொள்ள மாட்டோம் என உறக்கத்தில் இருக்கும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு, ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கோவை மாவட்ட அறநிலையத்துறை இணை ஆணையர் ரமேஷ் ஆகியோர் விழித்துக் கொண்டு உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்பதே பக்தர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களின் வேண்டுதலாகும். என்ன செய்யப் போகிறார்கள் பொருத்திருந்து பார்ப்போம்..! ■

## கிணத்துக்கடவு

# அபார வளர்ச்சியில் அ.ம.மு.க..!

## தேர்தலுக்கு தயார் நிலையில் நிர்வாகிகள்

**தமிழகத்தில் டி.டி.வி தினகரனின் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்திற்கு, தென்மாவட்டங்களுக்கு அடுத்து சொல்லும் அளவிற்கு மகத்தான ஆதரவு நிலை காணப்படும் மாவட்டமாக கோவை மாவட்டம் உள்ளது. காரணம், அக்கட்சியின் கழக துணை பொதுச்செயலாளரும், மேற்கு மண்டல பொறுப்பாளருமான, முன்னாள் அமைச்சர் சண்முகவேலு.**

கோவை தெற்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் எம்.பியுமான சுகுமார், எம்.ஜி.ஆர் கால அரசியல்வாதியான அப்பாத்துரை மற்றும் முன்னாள் எம்.எல்.ஏ ரோகிணி போன்ற அ.தி.மு.கவில் கோலோச்சிய முக்கிய தலைகள் எல்லாம் இன்றைக்கு கோவை மாவட்ட அ.ம.மு.கவில் பணியாற்றி வருவது தான் என்பது அனைவரும் அறிந்ததே.

ஆரம்பத்தில் பதவிக்காக பலபேர் கட்சிக்கு பாய்ந்து வந்தாலும், ஒருசில தேர்தல்களில் தோல்வி கண்டவுடன், வந்த வேகத்தில் ஓட்டம் பிடித்து விட்டனர். ஆனால், ஒருசில உண்மை விசுவாசிகள் வெற்றியானாலும், தோல்வியானாலும், எந்த சூழ்நிலையிலும் பின்வாங்க மாட்டோம் என உறுதியாக நின்று, தினகரனுக்கு தோளோடு தோள் கொடுத்து வருகின்றனர். அந்த வகையில் கோவை கிழக்கு மாவட்டம் கிணத்துக்கடவு மேற்கு ஒன்றியச் செயலாளர் என்.ஆர்.வினீஷ் அ.ம.மு.கவின் வளர்ச்சிக்காக அரும்பாடு பட்டு வருகிறார். கடந்த நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் கவுன்சிலர் பதவிக்கு போட்டியிட்ட இவர், ஆளுந்தரப்பு கண்ணிலேயே விரல் விட்டு ஆட்டி விட்டார் என்றே சொல்லலாம்.



டிடிவி தினகரன்

எப்படியெனில், ஆளுங்கட்சி தரப்பில் போட்டியிட்டவருக்காக, அக்கட்சியின் சார்பில் தொடக்கத்தில் ஓட்டுக்கு ஆயிரம் ரூபாய், வெள்ளிக் கொலுசு என்று கொடுத்தவர்கள், வினீஷிற்கு





டிடிவி தினகரனுடன் சண்முகவேலு, அப்பாதுரை, ரோகினி கிருஷ்ணகுமார்

மக்கள் மத்தியில் காணப்பட்ட அபரிமிதமான செல்வாக்கினை கண்டு மிரண்டு போய், மீண்டும் ஒரு ரவுண்டு பணம் மற்றும் ஹாட்பாக்ஸ் உள்ளிட்ட பாத்திர பண்டங்கள் என வாக்காளர்களுக்கு கொடுத்து போராடி, வெறும் எட்டு வாக்கு வித்தியாசத்தில் வினீஷை தோல்வியுற செய்தனர்.

இப்படி தனது மக்கள் செல்வாக்கினால் அனைத்து கட்சியினரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்திய வினீஷ், கட்சியின் பொதுச் செயலாளர் டி.டி.வி.தினகரனிடமும், மேற்கு மண்டல பொறுப்பாளர் சண்முகவேலு மற்றும் கிணத்துக்கடவு கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.ஏ.செந்தில் குமார், கிணத்துக்கடவு பேரூராட்சி செயலாளர் எல்.என்.பேச்சிமுத்து ஆகியோரிடம் மிகவும் நல்ல பெயர் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. அதோடு பல்வேறு கட்சியிலிருந்து விலகி நிறைய பேர் வினீஸின் தலைமையில் தங்களை அ.ம.மு.கவில் இணைத்துக் கொள்வது, கட்சியில் அடிக்கடி நடக்கின்ற நிகழ்வாக இருக்கிறது.



உடுமலை சண்முகவேலு



என்.ஆர்.வினீஷ்

அந்த வகையில், பேரூராட்சி அ.தி.மு.க 13 வது வார்டு செயலாளர் வி.நடராஜ், கே.குமார் மற்றும் வடிவேல், ஏ.பி.நடராஜ், ஊட்டி சுப்பிரமணி, ஆறுச்சாமி, 10 வது வார்டு கதிர்வேல், 13 வது வார்டு மகாலிங்கம், பச்சையப்பன் உட்பட ஏராளமான மாற்று கட்சியினர் வினீஷின் முன்னிலையில் கட்சியில் இணைந்து, சிறப்பாக செயல்பட்டு கொண்டிருக்கின்றனர். மேலும் கே.வி.நடராஜ், வடிவேல், குமார், சீனிவாசன் ஆகியோரும் வினீஷுடன் இணைந்து சிறப்பாக பணியாற்றி வருகிறார்கள்.

அதோடு, பொதுவாகவே என்.ஆர்.வினீஷ் கட்சிப்பணி என்று வந்து விட்டால், நேரம்காலம் பார்க்காமல் கடுமையாக உழைக்க கூடியவர். பண விஷயத்திலும் யாரையும் எதிர்பார்க்காமல், தனது சொந்த பணத்தை கட்சிக்காக செலவழித்து, கட்சி தலைமை விரும்புகிறபடி திறம்பட பணியாற்றும் வினீஷ், கட்சிக்காரர்கள் மற்றும் பொதுமக்கள் என எல்லா தரப்பினருக்கும் எந்த உதவியையும், எந்த நேரத்திலும் சலைக்காமல் செய்து வருகிறார். சாதி மத இன வேறுபாடின்றி அனைத்து மக்களுக்கும் வேண்டுகிற உதவிகளைச் செய்து வரும் வினீஷின் கட்சிப் பணி மற்றும் மக்கள் நலப் பணிகளால், கிணத்துக்கடவில் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் அமோகமான வளர்ச்சி அடைந்து வருகிறது என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை..! ■

குமரகுரு



# ஜோசப் விஜய் ஜொலிப்பாரா..? சோலியைப் பார்ப்பாரா..?

**தமிழக அரசியலில் புதிய கட்சியாக கடந்த ஆண்டு பிப்ரவரி 2 ஆம் தேதி நடிகர் விஜய்யால் தொடங்கப்பட்ட தமிழக வெற்றிக் கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு மதுரை பாரபத்தியில் பிரமாண்டமாக நடைபெற்று முடிந்திருக்கிறது.**

மாநாட்டில் வரலாறு திரும்புகிறது என்ற வாசகத்துடன் தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர்கள் அண்ணா மற்றும் எம்.ஜி.ஆர். புகைப்படங்களுடன் விஜய்யின் புகைப்படமும் இடம் பெற்றிருந்தது. இதையொட்டி மேடையில் பேசிய த.வெ.க தலைவர் விஜய், தி.மு.க, பா.ஜ.க உள்ளிட்ட கட்சிகளை கடுமையாக விமர்சித்திருந்தார். மாநாட்டில் விஜய் பேசிய பேச்சு தற்போது தமிழக அரசியலில் விவாதப்பொருளாக மாறி வருகிறது. இது குறித்து தமிழக அரசியல் தலைவர்கள் கருத்தும், பதிலடியும் கொடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில், விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திருமாவளவன் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினார். அப்போது அவர், கவர்ச்சி இருப்பதால் தான் திரைப்படைத் துறையை சார்ந்தவர்கள் நம்பிக்கையோடு அரசியலில் களம் இறங்குகிறார்கள். ஆனால், இன்றைய தலைமுறையினர் அரசியல்வாதிகளை விடவும் அரசியல் விழிப்புணர்வு பெற்றவர்களாக இருக்கிறார்கள் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். 40,50 ஆண்டுகள் அரசியல் களத்தில் பணியாற்ற கூடியவர்களின் போக்குகளை துணிந்து விமர்சிக்கக்கூடிய அளவுக்கு அரசியல் ஈடுபாடும், அரசியல் விழிப்புணர்வும் தமிழகத்தில் வளர்ந்திருக்கிறது என்று நான் நம்புகிறேன். எனவே, வெறும் திரை மாயை ஆட்சியை பிடிக்க போதாது. தமிழ்நாட்டு மக்கள் அப்படி ஏமாற மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்.

மாநாட்டில் லட்சக்கணக்கில் மக்கள் திரள்வது என்பது திரைப்படத்தில் புகழ் பெற்ற செல்வாக்கு பெற்ற கதாநாயகர்களுக்கு இயல்பான ஒன்று தான். ஆந்திராவில் சிரஞ்சீவி, பவன் கல்யாண் அதைப்போல் தமிழகத்திலே பல தலைவர்கள் இன்றைக்கு நாம் விஜயகாந்த் உட்பட விஜய் வரையிலும் பார்க்கிறோம். ஆனால், அவர்களால் கடைசி வரையில் தாக்கு பிடித்து நிற்க முடிகிறதா என்ற கேள்வி எழுகிறது. ரசிக பட்டாளம் என்பது வேறு, அரசியல் விழிப்புணர்வுடைய விழிப்புணர்வு

களப்பணியாளர்கள் என்பது வேறு. சில லட்சம் பேர் போதாது ஆட்சியை கைப்பற்றுவதற்கு.. 5 லட்சத்தில் இருந்து 10 லட்சம் பேர் வரை ஒரு இடத்திலே திரண்டால் உங்களுக்கு பிரமிப்பை உருவாக்கும். ஆனால் அது ஆட்சிக்கு பயன்படாது. அதை வைத்து நாம் ஆட்சி மாற்றமே நிகழ்ந்துவிடும் என்று சொல்ல முடியாது. கட்சி தொடங்கி இத்தனை ஆண்டுகள் கடந்த நிலையில் இரண்டு மாநில மாநாடுகளை நடத்தி இருக்கிறார்கள். ஒன்றாவது மாநாடு, இரண்டாவது மாநாடு என்றுதான் அதற்கு பெயர் சூட்ட முடிந்ததே தவிர கருத்தியல் சார்ந்து அந்த மாநாட்டுக்கு பெயர் சூட்ட முடியவில்லை. அதில் கருத்தியல் இல்லை.



திருமாவளவன்

இந்த மாநாட்டின் நோக்கம் என்ன.? வெறும் கூச்சல், வெற்று சவடால்கள் விஜய் மாநாடு என்றுதான் சொல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அதில் அதிகபட்சமாக ஆட்சியை கைப்பற்றுவோம் என்கிற ஒரு வேட்கை தெரிகிறது. அதனால் தி.மு.கவை வீழ்த்துவோம் என்கிற வெறுப்பு வெளிப்படுகிறது. மற்றபடி அதில், அரைத்த மாவையே அரைத்து, புளித்த மாவே அரைக்கிற ஒரு மாநாடாகத்தான் அது முடிந்தது. போன மாநாட்டில் சொன்னது சரி தான். இந்த மாநாட்டில் ஒரு வளர்ச்சி இருக்க வேண்டும். நாங்கள் என்ன செய்ய போகிறோம் என்று பேச வேண்டும். இன்றைக்கு பற்றி எரிந்துக் கொண்டிருக்கும் பிரச்சனையான தீவிர திருத்தம் குறித்து அவர் பேசவில்லை.

அடுத்து 30 நாட்கள் சிறையில் இருந்தாலே மக்கள் பிரதிநிதியின் பதவி பறிக்கப்படும் என்ற சட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த சட்டத்தின் தொடர்பாக அவரின் நிலைபாடு என்ன? அதைப் பற்றி அவர் சொல்லவில்லை. தமிழ்நாட்டில் தூய்மை பணியாளர்களின் பிரச்னை பெரிய அளவில் விவாதிக்கப்பட்டது. அதை பற்றி எந்த கருத்தும் இல்லை. பெரியார் என்ன சொன்னார்? அதை சார்ந்த எந்த பேச்சும் இல்லை. அம்பேத்கர் எதற்காக பாடுபட்டார்? அதைச் சார்ந்த எந்த கருத்தும் இல்லை. வெறும் தி.மு.க வெறுப்பு, ஆட்சி அதிகாரம் என்கிற நிலையில் தான் ஒரு மாநாடு நடந்து முடிந்திருக்கிறது. எனவே அவர்கள் கருத்தியலாக இன்னும் வரவில்லை.

எம்.ஜி.ஆர் காலத்தில் இருந்த மாதிரி மக்கள் இப்போது இல்லை. இன்றைக்கு இருக்கிறவர்கள் ஒவ்வொருத்தரும் ஹீரோ, ஒவ்வொருத்தரும் பத்திரிகையாளர். இன்றைக்கு மீடியா சொல்வதை நம்பி இருக்கற மக்களா இல்லை. ஒவ்வொருத்தரும் மீடியாவாக மாறிவிட்டார்கள். ஒரு காலத்தில் வெறும் ஹீரோவை திரையில் இருந்து பார்த்தான். அதனால அவனுக்கு ஒரு மயக்கம் இருந்தது. இன்றைக்கு ஒவ்வொருத்தரும் தானே ஹீரோங்கிற லெவலுக்கு மேல வந்திருக்கிறான். அதனால் அந்த 1977 காலம் வேற 2026 காலம் வேற என்று கூறி உள்ளார்.

மாநாட்டு மேடை 200 அடி நீளத்திலும் 60 அடி அகலத்திலும் அமைக்கப்பட்டிருந்தது. கிட்டத்தட்ட 200 ஏக்கர் பரப்பில் சுமார் ஒன்றரை லட்சம் தொண்டர்கள் அமரும் வகையில் இருக்கைகள் அமைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு கேலரியின் முகப்பிலும் தொண்டர்களின் வருகையை பதிவு செய்து சான்றிதழ் வழங்கும் வகையில் க்யூ.ஆர் கோடு வைக்கப்பட்டிருந்தது. இந்த க்யூ ஆர் கோடை எத்தனை பேர்பயன்படுத்தினார்கள் என்ற விவரங்கள் ஏன் வெளியிடப்படவில்லை! என்று கேட்கிறார்கள் பொதுவான மக்கள்.

விஜய் இம்மாநாட்டிற்குப்பின் மிகுந்த உற்சாகமாகியுள்ளார். முதல்வர் கனவு மேலும் பிரகாசமாக அவரின் மனதில் பிரதிபலிக்கிறது. அதனால் அவர், நம் மீது வீசப்படும் விமர்சனங்களில் நல்லவற்றை மட்டும் நமதாக்கி உரமேற்றுவோம். தேவையற்றதை புறந்தள்ளிப் புன்னகைப்போம். மக்களுடன் தோளோடு தோள் சேர்ந்து தொடர்ந்து பயணிப்போம். தூய அரசியல் அதிகார இலக்கை வெல்வோம். 1967, 1977 தேர்தல் அரசியல் வெற்றி விளைவுகளை, வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலிலும் நம் தமிழ் மக்கள் நமக்காக நிகழ்த்திக் காட்டப் போவது நிச்சயம். நல்லதே நடக்கும், நம்பிக்கையோடு பயணிப்போம், வெற்றி நிச்சயம் இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

விஜய் கட்சி மாநாடு குறித்து சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், விஜய்யின் புதிய முயற்சிக்கு வாழ்த்து தெரிவித்தார்.

மேலும், விஜய் தனக்கு நீண்டநாள் நண்பர், அவரைத் தனக்குச் சிறுவயதிலிருந்தே தெரியும் என்று கூறினார். நான் முதன்முதலில் தயாரித்த திரைப்படம் அவருடையது தான் என்றார்.

இந்த 75 ஆண்டுகாலமாக வேறெந்த கட்சியும் துவங்கப்படவில்லை என்று கூற முடியாது. பல கட்சிகள் வந்திருக்கின்றன, பல கட்சிகள் காணாமல் போயிருக்கின்றன. மக்கள் பணி தான் முக்கியம். மக்கள் யாரை ஏற்றுக்கொள்கிறார்கள் என்பது மிக முக்கியம். கொள்கைகள் தான் முக்கியம்," என்றார்.

நாங்கள் அரசியலுக்கு வந்த போது எங்களுக்கு இத்தகைய ஆதரவு கிடைக்கவில்லை என்று

# சிரஞ்சீவியா நடிகர் விஜய்..?

10 லட்சம் ரசிகர்களை ஒரே இடத்தில் திரட்டிய தெலுங்கு சூப்பர் ஸ்டார் சிரஞ்சீவி... பிரஜா ராஜ்யம் என்கிற புதிய கட்சியை 2008ஆம் ஆண்டு துவக்கினார்.

ஆளும் காங்கிரஸ், எதிர்க்கட்சியாக பலமோடு இருந்த தெலுங்கு தேசம் மற்றும் வடக்கு ஆந்திராவில் மட்டும் வலுவாக இருந்த தெலுங்கானா ராஷ்டிர சமிதி ஆகிய கட்சிகளுக்கு மாற்றாக வந்தார் சிரஞ்சீவி. எந்த கட்சியும் அதற்கு முன்பாக 10 லட்சம் பேரை ஓரிடத்தில் திரட்டி ஆந்திராவை அதிர வைத்தது கிடையாது என்கிற பிம்மாண்ட அரசியல் சாதனையை செய்தபடி அரசியலுக்கு வந்தார் சிரஞ்சீவி.



அன்று... ஆந்திராவின் மொத்த வாக்காளர்கள் 5.5 கோடி பேர். திருப்பதியில் திரண்ட ரசிகர் கூட்டம் சுமார் 2% வாக்காளர்கள். இவர்கள் ஒவ்வொருவருக்கும் பின் 10 பேர் என்றாலே 22% ஓட்டுகள் சிரஞ்சீவி வசம் இப்போதே உள்ளது, அடுத்த ஒரு ஆண்டு பிரச்சாரம் மூலம் மேலும் 15% அதிகரிக்கும். ஆட்சியை பிடித்து முதலமைச்சர் ஆகிவிடுவார் என்றார்கள். பல அரசியல் திறனாய்வு கணிப்பாளர்கள்.

மறு ஆண்டு 2009ல் நாடாளுமன்றத்துடன் இணைந்து நடந்த, ஒருங்கிணைந்து இருந்த அன்றைய ஆந்திரப்பிரதேச சட்டமன்றத் தேர்தலில், சூப்பர் ஸ்டார் சிரஞ்சீவியின் கட்சி நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத்தின் அனைத்து இடங்களிலும் தனித்து போட்டியிட்டது.

இந்திய தேர்தல் ஆணையம் இக்கட்சிக்கு பொது சின்னம் ஒதுக்க மறுத்து விட்டது. ஒன்றியத்திலும் மாநிலத்திலும் ஆளும் காங்கிரஸ் கட்சியின் சதி என்னை கண்டு அஞ்சுகிறது. எங்கள் கட்சி வேட்பாளர்களுக்கு ஒவ்வொரு தொகுதியிலும் வெவ்வேறு சுயேட்சை சின்னம் தந்து முடக்கப் பார்க்கிறது.. என்றெல்லாம் குற்றச்சாட்டு கூறி, சுப்ரீம் கோட்டுக்கு சென்று வழக்கு போட்டார் சிரஞ்சீவி. வழக்கில், அவர் கட்சி போட்டியிட பொது சின்னம் ஒன்றை அனைத்து தொகுதிகளுக்கும் ஒதுக்குமாறு தேர்தல் ஆணையத்துக்கு அதிரடியாக இடைக்கால தீர்ப்பு வழங்கியது. சிரஞ்சீவிக்கு துவக்கமே மிகப்பெரிய வெற்றி என்று எல்லோரும் கூறினார்கள்.

ரயில் எஞ்சின் என்கிற ஒரு பொது சின்னத்தில், 2009 ஆம் ஆண்டு ஆந்திராவின் 42 நாடாளுமன்ற தொகுதியிலும், 294 சட்டமன்ற தொகுதியிலும் தனித்து போட்டியிட்டது சூப்பர் ஸ்டார் சிரஞ்சீவியின் கட்சி.

சிரஞ்சீவிக்கு அன்று நாடாளுமன்றத் தேர்தல் முக்கியமல்ல.

ஆகவே, முதலமைச்சர் வேட்பாளர் சிரஞ்சீவி என்கிற அந்தஸ்தில், 2009 சட்டமன்ற தேர்தலில் 294 தொகுதிகளிலும் தனித்து போட்டியிட்டு, 148 என்கிற மெஜாரிட்டி என்ற இலக்கை நோக்கி சென்ற இக்கட்சி, வெறும் 18 இடங்களை மட்டுமே வென்றது.

தங்களின் சூப்பர் ஸ்டார் சிரஞ்சீவியை ஆந்திர முதலமைச்சர் ஆக்குவதே ரசிகர்களின் விருப்பம் என்பதால் சட்டமன்றத் தேர்தலில் தான் அதிக கவனம் தரப்பட்டது. அதிகம் பேர் தங்கள் வீட்டு புள்ளை (சிரஞ்சீவியின் ரசிகர்) சொன்னதை கேட்டு, அவர்களின் ஆசைக்கு இணங்கி சிரஞ்சீவி கட்சிக்கே பலரசிகர் மன்ற குடும்பத்தினர் ஓட்டு போட்டனர் போல. அதனால், சட்டமன்ற

கூறிய நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், விஜய்யின் இந்த மாநாடு ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கூறினார்.

மதுரை தெப்பக்குளம் அருகே மருதுபாண்டியர்கள் சிலைக்கு மாலை செலுத்திய பிறகு பேசிய அவர், ஒரு அரசியல் கட்சியைத் துவங்கும்போது அது தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். நாங்கள் எல்லாம் வரும்போது எங்களுக்கு இவ்வளவு ஆதரவு இல்லை. எளிய பிள்ளைகள், திரைப் புகழ் இருக்கும்போது நல்ல வீச்சும் ரீச்சும் கிடைக்கும் என்று அவர் தெரிவித்தார். கட்அவுட்களில் அரசியல் இல்லை. கருத்தியல் தான் அரசியல். வேலு நாச்சியார், அம்பேத்கர் கட் அவுட்களை வைப்பது விஷயமில்லை. அவர்களின் பங்களிப்பை எடுத்துச் செல்ல வேண்டும் என்று பேசிய சீமான், கூட்டணி குறித்தும் கருத்து தெரிவித்தார்.

மதுரையில் 2வது மாநில மாநாடு என விஜய் அறிவித்த உடனே எதிர்பார்ப்பு பற்றிக்கொண்டது. ஏனென்றால், முதல் மாநில மாநாட்டை வட தமிழகமான விக்கிரவாண்டியில் வெற்றிகரமாக நடத்தியது த.வெ.க. அதேபோல தென்பகுதியான மதுரையில் பிரம்மாண்டம் காட்ட முடியுமா என்ற கேள்வி இருந்தது. அந்தக் கேள்விகளுக்கு நெத்தியடியாக பதிலை சொன்னது, மதுரையில் திரண்ட லட்சக்கணக்கான கூட்டம்.

பிரம்மாண்ட கூட்டம், அதற்கான ஏற்பாடுகள், கூட்ட மேலாண்மை என தமிழகத்தில் தி.மு.க, அ.தி.மு.க போன்ற முதன்மைக் கட்சிகளுக்கு இணையாக கலக்கியது த.வெ.க. தமிழகம் முழுவதிலும் இருந்து சாரை சாரையாக திரண்ட இளைஞர்கள் மதுரையை ஸ்தம்பிக்க வைத்தனர்.

தேர்தலுக்கு தயாராகும் நேரத்தில் இந்த மாநாடு, த.வெ.கவுக்கு பல பூஸ்டர் பாயின்டுகளை வழங்கியுள்ளது. ஒன்று, கட்சிக்கான கட்டுமானம்.

தேர்தலில் சிரஞ்சீவி கட்சிக்கு 16% வாக்குகள் கிடைத்தன.

ஒரே தேர்தலில் முதலமைச்சர் நாற்காலி என்கிற இலக்கில் தேர்தலில் குதித்த சிரஞ்சீவி 2 சட்டமன்ற தொகுதிகளில் போட்டியிட்டார். அதில் ஒன்றில் தோற்றார். ஒன்றில் மட்டுமே வென்றார். சிரஞ்சீவியே தோற்றது தேர்தலுக்கு முன் கட்டப்பட்ட சிரஞ்சீவி மீதான ஊடக பில்டப்புக்கு மிகப்பெரிய தோல்வியாக ஆனது.

ஆனாலும், அக்கட்சி தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி கட்சியை முந்தி, மூன்றாவது இடத்திற்குத்தான் வர முடிந்தது. 28% ஓட்டுகளை பெற்று 92 இடங்களை வென்ற சந்திரபாபு நாயுடு மீண்டும் எதிர்க்கட்சித் தலைவர் ஆனார். ஆளும் காங்கிரஸ் கட்சியின் முதலமைச்சர் ஒய்.எஸ்.ராஜசேகர் ரெட்டி, 37% ஓட்டுகளை பெற்று 156 தொகுதியில் வென்று மீண்டும் முதலமைச்சர் ஆனார்.



சிரஞ்சீவிக்கும் அவரின் ரசிகர்களுக்கும் முக்கியமல்லாத நாடாளுமன்றத் தேர்தலில், வெறும் 6% ஓட்டுகளை மட்டுமே பெற்ற சிரஞ்சீவி கட்சி, ஒரு தொகுதியில் கூட வெற்றி பெறவில்லை..!

22% ஓட்டுவங்கி இருப்பதாக அனுமானம் செய்யப்பட்ட சிரஞ்சீவி கட்சிக்கு வெறும் 6% ஓட்டுகள் மட்டுமே நாடாளுமன்றத்தில் கிடைத்தன. ஆகவே, இதுவே சிரஞ்சீவி கட்சியின் ரசிகர் பலத்தில் அமைந்த ஒரிஜினல் வாக்கு வங்கியாக பார்க்கப்பட்டது. ஆகவே, ஒரு தொகுதியில் வென்ற AIMIM கட்சியின் ஒவைசிக்கு பின்னாடி 5வது இடத்திற்கு சென்று விட்டார் சிரஞ்சீவி.

சிரஞ்சீவியே தன் சட்டமன்ற தொகுதியில் தோற்றதும், ஆட்சியை பிடிக்க முடியாவிட்டாலும் கூட எதிர்க்கட்சி ஆகக்கூட முடியவில்லையே என்கிற கடும் ஏமாற்றமும், ஏகப்பட்ட தொகுதிகளில் சிரஞ்சீவி கட்சிக்கு டெபாசிட் போனதும், அதன் பிறகு சிரஞ்சீவிக்கு அரசியல் மீதான ஆர்வம் விருப்பம் எல்லாம் நசிந்து போகச் செய்தது. அதன் பிறகு ரசிகர்களுக்கும் கட்சியில் ஆர்வம் இல்லை.

294 தொகுதியிலும் சிரஞ்சீவி என்கிற ஒற்றை முகம் வெற்றி பெற முடியாது. ஒவ்வொரு தொகுதியிலும் அந்த ஊர் மக்களின் நம்பிக்கையை பெற்ற பிரபலமான வேட்பாளர்கள் அவசியம் என்பதை சிரஞ்சீவி மட்டுமின்றி அவரது ரசிகர்களும், முக்கியமாக ஊடக பத்திரிக்கையாளர்களும் விளங்கிக் கொண்டனர். ஆகவே, ஒவ்வொரு தொகுதியிலும் மாவட்ட செயலாளர்கள், வட்ட செயலாளர்கள், ஒன்றிய செயலாளர்கள்/ பூத் ஏஜெண்ட் போன்ற பலமான கட்சிக் கட்டுமானம் கொண்ட காங்கிரஸ், தெலுங்கு தேசம் மற்றும் தெலுங்கானா ஏரியாவில் மட்டும் அப்படியான பலம் கொண்ட தெலுங்கானா ராஷ்டிர சமிதி கட்சிகளை எதிர்த்து வெற்றி பெற மிகப்பெரிய உயரம் தாண்ட வேண்டும் என்ற உண்மை சிரஞ்சீவிக்கு புரிந்தது. அதற்கு இன்னும் பல ஆண்டுகள் கடுமையாக உழைக்க வேண்டும் என்பதும் சிரஞ்சீவிக்கு புரிந்தது. அந்த உழைப்பில் 100ல் ஒரு பங்கு உழைத்து, சினிமாவில் பல கோடி சம்பாதித்தவர் சிரஞ்சீவி.

ஆதலால், வெறும் 2 ஆண்டுகள் மட்டுமே உயிர் வாழ்ந்த சிரஞ்சீவின் பிரஜா ராஜ்யம் கட்சி. 2011ல் கலைக்கப்பட்டுவிட்டது..!

கட்சி ஆரம்பித்த 2008 முதல் சினிமாவில் நடிக்காமல் இருந்த சிரஞ்சீவி மீண்டும் ஹீரோவாக நடிக்கப் போய் விட்டார்..!!

இந்த மாநாட்டுக்கு வெறும் மதுரை அல்லது அதனை சுற்றியுள்ள மாவட்டங்களில் இருந்து மட்டும் கூட்டம் வரவில்லை. தமிழகம் முழுவதிலுமிருந்து கூட்டம் வந்தது. அப்படியானால், இவ்வளவு பெரிய கூட்டத்தை கூட்டும் அளவுக்கு கிளை, ஒன்றியம், நகரம், தொகுதி, மாவட்டம் என முக்கிய கட்டமைப்புகள் ஓரளவு உருவாகியுள்ளதை இது காட்டுகிறது.

அடுத்ததாக விஜய்யின் பேச்சு. விஜய்யின் தங்கிலிஷ் கலந்த 2 கே கிட்ஸ்கள் பாணியிலான பேச்சு இந்த முறையும் அவர்களின் தொண்டர்களுக்கு திருப்தியாக இருந்ததை விசில் சத்தங்கள் உறுதிசெய்தன.

அதேபோல, விஜய் தனது பேச்சின் மூலமாக பல முக்கிய கேள்விகளுக்கும் பதில் சொல்லியுள்ளார். அதில், தி.மு.க, பா.ஜ.க கட்சிகள்தான் எதிரி என்பதை மீண்டும் அழுத்தமாக கூறினார். பிரதமர் மோடி, முதல்வர் ஸ்டாலின் பெயர்களை சொல்லி இதுவரை விமர்சிக்காத விஜய், இப்போது மோடியின் பெயரை சொன்னதுடன், அங்கிள் ஸ்டாலின் என்று அனல் கிளப்பினார். முக்கியமாக இதுவரை தொடாத அ.தி.மு.கவையும் வம்புக்கு இழுத்து விமர்சித்ததுடன், சீமானுக்கும் மறைமுகமாக மெசேஜ் சொன்னார்.

அதேபோல, உண்மை, நேர்மையான அரசியல் என தனது பெரும்பான்மை தொண்டர்களான 2 கே கிட்ஸ்களுக்கு புரியும் வகையில் சிலவற்றை பேசியதுடன், சிங்கத்தின் கதை, குட்டிக் கதையையும் சொல்லி எழுச்சியூட்டினார். இந்த மாநாடு த.வெ.கவினருக்கு மிகவும் நிறைவானதாகவே இருந்தது. அதையும் தாண்டி பொதுத்தளத்தில் உள்ளவர்களையும் கவனிக்க வைத்துள்ளது என்பது உண்மைதான் என்கின்றனர் அரசியல் பார்வையாளர்கள்.

தி.மு.க, அ.தி.மு.க, பா.ஜ.கவுக்கு மாற்றான சக்தி எனும் இமேஜை ஓரளவு இந்த மாநாட்டின்

மூலமாக பதியவைத்துள்ளார் விஜய். அதேபோல, அ.தி.மு.கவுடன் எப்படியும் கூட்டணி வைத்துவிடுவார் என்று இதுவரை தன் மீது இருந்த யூகங்களையும் உடைத்தெறிந்துள்ளார்.

முக்கியமாக, இந்த மாநாட்டில் எம்.ஜி.ஆரை புகழ்பாடியும், அ.தி.மு.க தொண்டர்களை பரிவோடும் பேசினார். இதில் இரு கணக்குகள் உள்ளது. ஒன்று இ.பி.எஸ் மீது அதிருப்தியில் உள்ள அ.தி.மு.கவினரை தன்பக்கம் இழுப்பது. அடுத்ததாக இ.பி.எஸ் மீது கோபத்தில் உள்ள ஓ.பி.எஸ், தினகரனுக்கு வலைவீசுவது. அதேபோல விஜயகாந்த்தை பாராட்டி தே.மு.தி.கவை கூட்டணிக்குள் கொண்டுவருவது என பல கணக்குகளை தன் பேச்சில் வெளிப்படுத்தினார்.

கூட்டணிக்கு நான்தான் தலைமை, ஆனால் என்னோடு வந்தால் ஆட்சியில் பங்கு தருவேன் என்று மீண்டும் அழுத்தமாக சொல்லியுள்ளார். பிரமாண்ட கூட்டம், விஜய்யின் பேச்சு, எதிரிகள் யாரென்ற தெளிவு, கூட்டணிக்கான அழைப்பு என எல்லா விஷயத்தையும் தன் சுருக்கமான பேச்சில் தெளிப்படுத்தியது சிறப்புதான்.

அதீத தன்னம்பிக்கையில் இருக்கிறாரா விஜய்? ஆனால், விஜய்க்காக திரண்ட கூட்டம் என்பது இது ஒரு கட்சியின் மாநாடுதான் என்று நிரூபித்தாலும் கூட, விஜய்யின் உரையை மட்டுமே பிரதானப்படுத்தி ஒன்றரை, ரெண்டு மணி நேரத்தில் நடந்து முடிந்ததால், இது மாநாடுதானா அல்லது வெறும் பொதுக் கூட்டமா என்ற சந்தேகமும் எழாமல் இல்லை.

இந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்டதாக கூறப்படும் தீர்மானங்கள் கூட பெரிதாக ஹைலைட் ஆகவில்லை. அதேபோல், விஜய்யின் பேச்சில் வெறும் எதிர்ப்பரசியல் மட்டுமே இருந்ததே தவிர, த.வெ.கவின் கொள்கைகள் என்னென்ன என்பதற்கான கேள்விக்கு இறுதி வரை விடையே கிடைக்கவில்லை.

அதேபோல், த.வெ.க என்பது விஜய் என்ற ஒற்றை முகத்தையும், பிம்பத்தையும் வைத்துதான் கட்டமைக்கப்பட்டுள்ளது. அரசியல் ஞானமும், அனுபவமும் மிக்க உறுதுணையான பின்புலத் தலைவர்கள் யாருமே அங்கு இதுவரை இல்லை என்பதையும் மாநாட்டு மேடையில் பார்க்க



சீமான்



ரஜினி



எடப்பாடி பழனிசாமி

முடிந்தது. இவையெல்லாம், த.வெ.க மாநாடு மெகா ஹிட் ஆகாமல் போனதற்கான காரணங்கள் எனலாம்.

1967, 1977 வரலாறு திரும்புகிறது என்கிறார் விஜய். கட்சி ஆரம்பித்து ஒரே ஆண்டில் அண்ணாவும், எம்.ஜி.ஆரும் ஆட்சியை பிடித்துவிடவில்லை. தி.மு.க தொடங்கப்பட்டது 1949ஆம் ஆண்டில். அக்கட்சி படிப்படியாக வளர்ந்து சுமார் 18 ஆண்டுகளுக்கு பிறகு 67ல் ஆட்சியை பிடித்தார் அண்ணா.

தி.மு.கவில் 1953ல் இணைந்து அதன்பின் பல்வேறு நிலைகளில் பணியாற்றினார் எம்.ஜி.ஆர். 1962 எம்.எல்.சி ஆகவும், 1967, 71 தேர்தல்களில் தி.மு.க சார்பிலும் போட்டியிட்டு வெற்றிபெற்றார். 1972ல் அ.தி.மு.க தோன்றிய பின்னர் திண்டுக்கல், கோவை மேற்கில் நடந்த இடைத்தேர்தல்களில் நின்று வெற்றி பெற்றது. 1974ல் புதுச்சேரி சட்டசபை தேர்தலில் வென்று ஆட்சியையும் கைப்பற்றியது அ.தி.மு.க. இதன் பின்னர்தான் 1977ல் எம்.ஜி.ஆர் ஆட்சிக்கு வந்தார்.

இது இரண்டும் கடந்த கால தேர்தல் வரலாறுதான். ஆனால் விஜய் மேடையில் பேசும்போது, இதுபோன்ற புள்ளிவிவரங்களை எல்லாம் பொய்யாக்கி வெல்வேன் என்கிறார். இது அதீத தன்னம்பிக்கையா? அல்லது சாத்தியமான பேச்சா என்பது விரைவில் தெரியும்.

கடந்த ஆண்டு கட்சியை தொடங்கிய விஜய், அடுத்த ஆண்டு ஆட்சியை பிடித்து காட்டுவோம் என சவால் விடுகிறார். ஆனால், விஜய் சொல்லும் 1967, 77 தேர்தல்களில் அண்ணா, எம்.ஜி.ஆரே வலுவான கூட்டணி அமைத்துதான் வெற்றி பெற்றார்கள். அப்படி பார்த்தால், முதற்கட்டமாக வி.சி.க, கம்யூனிஸ்டுகளை கூட்டணிக்குள் இழுக்க முயற்சி செய்த விஜய்க்கு ஏமாற்றமே மிஞ்சியது.

இப்போது, விஜய் கைவசம் உள்ள வாய்ப்புகள் பாமக, தே.மு.தி.க, அ.ம.மு.க, ஓ.பி.எஸ் மட்டும்தான். இவர்களை த.வெ.க அணிக்குள் கொண்டுவருவது அத்தனை சுலபமில்லை, அதற்கு பா.ஜ.க அனுமதிக்குமா என்பதும் கேள்விக்குறிதான்.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க... பத்திரிகையாளர் உமாபதியிடம், 2026 சட்டமன்ற தேர்தலில் போட்டியே தி.மு.கவா? த.வெ.க.வா?



தராசு ஷ்யாம்



பத்திரிகையாளர் உமாபதி



துக்ளக் ரமேஷ்

என்பதுதான் என்கிறாரே விஜய் என்ற கேள்வி கேட்ட போது மிகவும் கேஷுவலாக 2026 ல் போட்டியே சீமானுக்கும் விஜய்க்கும்தான்! என்று குறிப்பிட்டது நகைச்சுவையாக இருந்தாலும் நியாயமாகத்தான் தெரிகிறது.

தராசு ஷ்யாம் விஜயை பற்றி கூறும் போது, கட்சி ஆரம்பித்தவுடன் ஆட்சியைப்பிடித்தது ஆந்திராவில் என்.டி.ஆர். ஒருவர்தான்! விஜய் என்.டி.ஆருமல்ல. எம்.ஜி.ஆருமல்ல! என்று கூறி விட்டார்.

துக்ளக் ரமேஸ் ஒரு பேட்டியில், சென்னையில் நடிகர் விஜயால் பல தொகுதிகளில் அ.தி.மு.க, பா.ஜ.க கூட்டணி மூன்றாவது இடத்திற்கு தள்ளப்படும் என்று ஒரு சர்வே சொல்கிறது. இது பற்றி எடப்பாடி யோசித்து நல்ல முடிவை எடுக்க வேண்டும்! என்று குறிப்பிட்டுள்ளார்.

மாற்றுக்கட்சியிலிருக்கும் விஜய் ரசிகர் ஒருவர் நம்மிடம் நான் விஜய் ரசிகர். நான் எனது ஓட்டை என் கட்சிக்கு போடுவேன். ஆனால் என் மகன் விஜய்க்குதான் போடுவான். என்னைப்பொறுத்தவரை விஜய் 15% ஓட்டுக்களை உறுதியாகப்பெறுவார். ஆனால் அவரால் 2026 ல் ஆட்சியமைக்க முடியாது. இரு திராவிட கழகங்களை மீறி அவரால் எளிதில் வந்துவிட முடியாது என்றார்.

மூத்த அரசியல் விமர்சகரிடம் பேசிய போது, விஜய் கடந்த வருடம்தான் கட்சி தொடங்கியிருக்கிறார். அவருக்கு இளைஞர்கள் ஆதரவு கண்கூடாகத்தெரிகிறது. ஆனால் அவர் எதிர்ப்பது மத்திய ஆளுங்கட்சியையும், தமிழக ஆளுங்கட்சியையும்தான். இரு பெரும் அதிகார வர்க்கத்தையும் இரட்டைஇலை என்கிற பெரிய சக்தியையும் மீறி விஜய் வெல்வது நடக்கப்போவதில்லை. மேலும் விஜய் ஓட்டுக்கு பணம் செலவழிக்க மாட்டார். கடைசி நேர பண பட்டுவாடா விஜயை இரண்டாமிடத்திலிருந்து மூன்றாவது இடத்திற்கு தள்ளி விடும். சில மறைமுக அதிரடிகள் நடந்தால் விஜய்காந்த் கதிதான் விஜய்க்கும் ஏற்படும்! என்றுகூறினார்.

விஜயின் தென் மண்டல மாநாட்டில் தென்னக மக்கள் மட்டும் கலந்துகொள்ளவில்லை. சென்னை, பெரம்பலூர், திருச்சி முதல் கன்னியாகுமரி வரை ரசிகர்கள் திரண்டு வந்துள்ளனர் என்பதால் அவரின் ஒட்டு மொத்த சக்திமிக்க வாக்குகள் அதிகபட்சமாக 5 லட்சத்தை தாண்டாது. அப்படியே வீட்டுக்குள்ளிருந்த ரசிகர்கள் திரண்டிருந்தாலும் அது பத்து லட்சத்தை தாண்டாது. எனவே விஜய் வரும் தேர்தலில் கணிசமான சதவீதத்தில் மட்டுமே வாக்குகளை பெறலாம். அது எதிர்கட்சியாகவோ ஆளுங்கட்சியாகவோ மாற்றாது! என்பது பொதுவான கருத்தாக உள்ளது என்றார்.

சினிமா பிரமுகர் ஒருவரிடம் கேட்டோம். அவர் நம்மிடம், சூப்பர் ஸ்டார் ரஜினியே ஒரு முறை தமிழகத்தில் தி.மு.க அ.தி.மு.க என்று ரெண்டு பெரிய ஜாம்பவான்களை எதிர்த்து போராடுவது சாதாரண விஷயமல்ல. வீட்டை விற்று நகைகளை விற்று கடன் வாங்கி செலவு செய்து மாநாட்டிற்கு வரும் ரசிகர்களை தெருவில் விட முடியாது. அதை யோசிப்பவன்தான் நல்ல வழிகாட்டி என்றுசூப்பர் ஸ்டாரே சொல்லி விட்டார். மேலும் சூப்பர் ஸ்டாரின் ரசிகர்கள் விஜய்க்கு வாக்களிக்க மாட்டார்கள். கமலின் ரசிகர்களும் விஜயின் கட்சிக்கு வாக்களிக்க போவதில்லை! என்று வேறு விதமாக சொன்னார்.

விருதுநகர் மாவட்ட பி.ஜே.பி ஆதரவாளரான அருண் நாட்டின் பிரதமரை முழுப்பெயரைச்சொல்லி அழைத்த விஜயை ஜோசப்விஜய் என்று நாங்கள் சொல்வோமே. அப்போது என்ன செய்வார்? எனக்கேட்கும் இந்துத்வா நிர்வாகிகளுக்கு ஜோசப்விஜய் என்ன பதில் சொல்லப்போகிறார்? என்பது கவனத்திற்குரிய விஷயம்.

கிறிஸ்தவரான ஜோசப்விஜய் இஸ்லாமிய மக்களுக்கு ஆதரவாக பேசினாலும் கடைசி நேரத்தில் மோடி வகையறா வந்து விடும் என்ற அச்சத்தில் அனைத்து ஜமாத்தார்களும் தேர்தலுக்கு முதல்நாள் இரவு ஒன்றுகூடி பேசி வாக்குகள் சிதறக்கூடாது என்று முடிவெடுத்து தி.மு.கவுக்கே வாக்களிப்பார்கள்! என்று கூறும் தென்காசி ஜமால் முகமதுவின் சொல் மற்றும் செயலை நம்மால் புரிந்துகொள்ள முடியும்.

இதையெல்லாம் யோசித்தால், கண்கூடாக கவனித்தால் ஜோசப்விஜய் ஜொலிப்பாரா? அல்லது சோலியைப்பார்ப்பாரா? என்று தெரிந்து விடும். வாக்காளர்களுக்கும் புரிந்து விடும்!. ■

அணைக்கட்டு | மகேஸ்வரன்

## அணைக்கட்டு தொகுதி

# கைமாறுமா தி.மு.கவின் அணையா விளக்கு..? கைப்பற்றுமா அ.தி.மு.க.,?

## குழப்பத்தில் தி.மு.க Vs அ.தி.மு.க

2026 சட்டமன்ற தேர்தல் • தொகுதி ரவுண்ட்அப் •

**வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி தி.மு.க, அ.தி.மு.கவிற்கு சம பலம் கொண்ட தொகுதியாக உள்ளது. இந்த தொகுதியை பொறுத்தவரை, அணைக்கட்டு ஒன்றியம், வேலூர் மாநகராட்சியின் கருகம்பத்தூர், வேலூர் புறநகர் பகுதியான பள்ளிகொண்டா, ஒடுக்கத்தூர் பேரூராட்சிகளும், பலவன்சாத்து, அரியூர், விருப்பாச்சிபுரம், பாகாயம் மற்றும் பென்னாத்தூர், (பேரூராட்சி) கணியம்பாடி மேற்கு பகுதியில் உள்ள 6 ஊராட்சிகளும் அடங்கியிருக்கிறது.**

அணைக்கட்டு சட்டமன்ற தொகுதியில் வன்னியர் சமூகத்தினர் சுமார் 35 சதவிகிதம் உள்ளனர். மலைவாழ் மக்கள், நாயுடு, ராஜாக்கள், தாழ்தப்பட்டோர் ஆகியோரும் சம பலத்துடன் உள்ளார்கள், இவர்களே தேர்தல் முடிவை தீர்மானிக்கும் முக்கிய சக்தியாகவும் உள்ளனர். இவர்களை தவிர யாதவர்கள், மற்றும் முதலியார் சமூகத்தினரும் அதிக அளவில் வசித்து வருகின்றனர். இதுவரை நடைபெற்ற 10 சட்டமன்ற தேர்தல்களில், அணைக்கட்டு தொகுதியில் அ.தி.மு.க 6 முறையும், தி.மு.க 4 முறையும், பா.ம.க ஒரு முறை வெற்றி பெற்றுள்ளன.

அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி எந்தவித தொழிற்சாலை பின்னணியுமின்றி முழுக்க முழுக்க விவசாயத்தையே நம்பியுள்ள தொகுதியாகும். ஆனால், அணைக்கட்டு மக்களின் நீண்ட கால எதிர்பார்ப்புககளான, மேல் அரசம்பட்டு கிராமத்தில் அனைக்கட்டு கட்ட வேண்டும் என்ற கோரிக்கை 10 ஆண்டு காலமாக இருந்து வருகிறது. தற்போதைய தி.மு.க எம்.எல்.ஏ நந்தகுமார் அதற்கான எந்த முயற்சியை எடுக்கவில்லை என்கின்றனர் விவசாய பெருமக்கள்.

அதேபோன்று, அணைக்கட்டு ஒன்றியத்தில் உள்ள குருமலை, பீஞ்சமந்தை, பலாம்பட்டு ஊராட்சிகளில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட



மலைவாழ் மக்கள் வசிக்கின்றனர். மேல் அரசம்பட்டில் அணை கட்ட வேண்டும் என்பது இம் மலை மக்களின் நீண்ட நாள் கனவு, கல்வி, மருத்துவம், தொழில்துறை, சுகாதார வசதிகளில் பின்தங்கியுள்ள இப்பகுதிக்கு சாலை மற்றும் பஸ் வசதிகளும் கனவாகவே உள்ளது.

அணைக்கட்டில் உள்ள மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தை, தாலுகா அளவிலான மருத்துவமனையாக உயர்த்த வேண்டும். அணைக்கட்டு பகுதியில் நீதிமன்றம் அமைக்க வேண்டும், குடிசை தொழிலுக்கான தொழிற்பேட்டை அமைக்க வேண்டும்.

விவசாயிகளின் நெல், மஞ்சள், வாழை, கொய்யா வகைகளை, பாதுகாக்க தனியாக

குளிருட்டப்பட்ட சேமிப்பு கிடங்குகள் அமைக்க வேண்டும்.

விலங்குகளிடமிருந்து மனிதர்களை காக்க பாதுக்கப்பட்ட வன பகுதியாக மேல் அரசம்பட்டு வன பகுதியை அறிவிக்க வேண்டும் என்பதும் இத்ததாகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக இருந்தாலும் அதிகார வர்கத்தால் இது நாள் வரை இந்த திட்டம் அமையவில்லை.

ஒடுகத்தூர், மற்றும் அருகிலுள்ள கிராமங்களுக்கு மினிபஸ் சேவை, விவசாயிகளுக்கு தோட்டக்கலை பயிர் வளர்க்கும் சிறப்பு திட்டங்களை கொண்டுவரவில்லை.

மாதனூரில் புதிய போலீஸ் நிலையம், பள்ளிகொண்டாவில் விரிவாக்கப்பட்ட வாரச்சந்தை மைதானம் அமைத்தல், வேலூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவ மனை போதிய மருத்துவர்கள், ஊழியர்கள் இன்றி, சுகாதார சீர்கேட்டால் சீரழியும் நிலையில் உள்ளது அதை மேம்படுத்த வேண்டும் போன்றவை இந்த தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கைகளாக இருந்து வருகிறது.

2021 சட்டமன்ற தேர்தலில் தி.மு.க சார்ப்பில் போட்டியிட்ட ஏ.பி. நந்தகுமார் 95 ஆயிரத்து 159 வாக்குகள் பெற்று அ.தி.மு.க வேட்பாளர் டி.வேலழகனை 3 சதவீதம் வாக்கு வித்தியாசத்தில் தோல்வியடைய செய்தார்.

வரும் 2026 கான சட்டமன்ற தேர்தலிலும் தி.மு.க சார்பில் மீண்டும் அணைக்கட்டு தொகுதியில் ஏ.பி. நந்தகுமார் நிறுத்தபட உள்ளதாக தி.மு.க வட்டாரத்தில் கூறப்படுகிறது இவரைத் தொடர்ந்து மாவட்ட ஊராட்சி தலைவர் பாபு, ஒன்றிய செயலாளர்கள் பொய்கை குமாரப் பாண்டியன், வெங்கடேசன், மலர்விழி, லோகநாதன், என பலர் சீட்டு கேட்டாலும் ஏ.பி. நந்தகுமார் தான் வேட்பாளர் என கிச்சன் கேபினட்டும், மாப்பிள்ளை சபரீஸ்சனும் டிக் அடித்து விட்டதால், நந்தகுமார் வெற்றி பெற்றதாகவே கூறி வருகின்றனர் தி.மு.க வினர்.

அதே போல், அ.தி.மு.க சார்பில், வேலூர் புறநகர் மாவட்ட கழக செயலாளர், த.வேலழகன் பெயர் முன்வைக்கப்படுகிறது. மேலும் அணைக்கட்டு தொகுதியில் வன்னியர் சமூகத்தை சேர்ந்தவர்கள் அதிகம் இருப்பதால் இவரையே முன்னிறுத்தும் முடிவில் இருப்பதாக அ.தி.மு.க வட்டாரத்தில் கூறப்படுகிறது.



எம்.எல்.ஏ நந்தகுமார்



வேலழகன்



அணைக்கட்டு பாபு

எம்.ஜி.ஆர், ஜெயலலிதா காலங்களில் அ.தி.மு.க கோட்டை என்று அழைக்க கூடிய அணைக்கட்டு தொகுதியை பணம் பலம், ஜாதி பலம் போன்றவற்றால் தி.மு.க பலம் பொருந்திய தொகுதியாக கருதினாலும் தி.மு.க வில் குறுநில மன்னர்களாக உள்ள ஒன்றிய, நகர, பேரூர் கிளை கழக செயலாளராக உள்ளவர்கள் கொலை, அடிதடி, அடாவடி, நில அபகரிப்பு, என்று பெரிய அளவிலான குற்றசாட்டு பட்டியலால் தி.மு.க ஆட்சிக்கு அவப்பெயரை ஏற்படுத்தியுள்ளது என்கின்றனர் சமூக ஆர்வலர்கள்.

அணைக்கட்டு தொகுதி பிரச்சார பயணத்திற்கு வருகை தந்த அ.இ.அ.தி.மு.க பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி, ஆளும் தி.மு.க வின் நிறைவேற்றாத தேர்தல் வாக்குறுதிகளை பட்டியலிட்டு, அ.தி.மு.க வே வெற்றி பெறும் என கூறியதால், அணைக்கட்டு.அ.தி.மு.க வினருக்கு புதிய உத்வேகம், புத்துணர்சியை அளித்துள்ளது என நம்புகின்றனர்.

கடந்த முறை 3 சதவிகித ஓட்டுகளில் தோல்வியுற்ற வேலழகனுக்கு 2026 சட்டமன்ற தேர்தலில் தி.மு.க வில் உள்ள உள்ளாட்சி தலைவர்கள் மற்றும் மக்களிடையே உள்ள எதிர்ப்பும் அலை, இரட்டை இலையின் வெற்றிக்கு, கூட்டணியில் மாம்பழமும் இணைந்தால் கை கொடுக்கும் என அணைக்கட்டு .அ.தி.மு.க.வினர் நம்புகின்றனர்.

மேலும், புதிய வரவாக வந்த தமிழக வெற்றிக் கழகம் மற்றும் நாம் தமிழர் கட்சிக்கு போட்டி அதிகம் இல்லாததால், அ.தி.மு.கவிற்கும், தி.மு.க.விற்கும் தான் இந்த தொகுதியில் போட்டி என்ற சூழல் உருவாகியுள்ளது. அணைக்கட்டு தி.மு.கவின் அனையா விளக்காக இருக்குமா.? அல்லது அ.தி.மு.கவின் அணையா விளக்காக மாறுமா.? என்று பொருத்திருந்து பார்போம்.

இருப்பினும். 2026 சட்டமன்ற தேர்தலில் அணைக்கட்டு சட்டமன்ற தொகுதியின் கூட்டணி இறுதி நிலவரம் தேர்தல் அறிவிக்கப்பட்ட பிறகே முழுமையாக தெரியும். ■

கோவை | இராதாகிருஷ்ணன்

# வந்தவர்கள் வளர்கிறார்கள்... கட்சியை வளர்த்தவர்கள்..?

## ● குமுறும் உடன்பிறப்புக்கள்

## ● கோவை தி.மு.கவில் கோஷ்டி சேர்க்கிறாரா செந்தில் பாலாஜி?

**2021 தேர்தலில் தென் மாவட்டங்களில் தி.மு.க கூட்டணி சுழற்றியதைப் போல கொங்கு மண்டலத்தின் பெருவாரியான தொகுதிகளை அ.தி.மு.க கூட்டணி வளைத்தது. அதிலும் கோவை மாவட்டத்தில் 10 தொகுதிகளையும் வென்றெடுத்தது. ஆனால், இந்த முறை அப்படி விட்டுவிடக் கூடாது என்பதில் கவனமாக இருக்கும் முதல்வர் ஸ்டாலின், ஆட்சிக்கு வந்த நாள் முதலாகவே கோவையை உள்ளடக்கிய கொங்கு மண்டலத்தில் தீவிர கவனம் செலுத்தி வருகிறார்.**

கோவைக்கென சிறப்புத் திட்டங்களை அறிவித்த முதல்வர் ஸ்டாலின், கோவை மாவட்டத்துக்கான பொறுப்பு அமைச்சராக செந்தில்பாலாஜியையும் நியமித்தார். வழக்கு காரணமாக செந்தில் பாலாஜி அமைச்சர வையிலிருந்து விலகினாலும், இன்னமும் அவர் கோவை மாவட்ட பொறுப்பாளராகவே நீடிக்கிறார். கூடுதலாக மண்டல பொறுப்பையும் அவருக்கு வழங்கி இருக்கிறார் ஸ்டாலின்.

கோவை மாவட்ட பொறுப்பு அமைச்சராக வந்ததுமே உள்ளாட்சித் தேர்தலிலும் மக்களவைத் தேர்தலிலும் கோவையில் தி.மு.கவை ஜொலிக்க வைத்து ஸ்டாலினின் குட்புக்கில் இடம்பிடித்தார் செந்தில் பாலாஜி.

இப்படியான சூழலில், கோவையில் செந்தில் பாலாஜி தனக்கென ஒரு ஆதரவு வட்டத்தை உருவாக்கி புது கோஷ்டியை வளர்ப்பதாகவும், கட்சிப்பதவி, அரசுப் பதவிகளுக்கு அவர்களை முன்னிலைப்படுத்தவதாகவும் கோவை தி.மு.கவினர் மத்தியில் இருந்து அதிருப்திக் குரல் கள் ஓங்கி ஒலிக்கத் தொடங்கி இருக்கின்றன.

இதுகுறித்து நம்மிடம் பேசிய கோவை தி.மு.கவினர் சிலர், தி.மு.க எதிர்க்கட்சியாக இருந்த போது எங்களைப் போன்றவர்கள் பதவியில் இருந்தோம். கட்சிக்காக பல்வேறு போராட் டங்களில் பங்கெடுத்து சிறை சென்றிருக்கி றோம். ஆனால், தி.மு.க ஆளும் கட்சியாக வந்த பிறகு படிப்படியாக எங்களை ஓரங்கட்டி, எங்களது பதவிகளையும் பறித்துவிட்டார்கள்.



சந்தில்பாலாஜி

செந்தில்பாலாஜி தி.மு.கவுக்கு வந்த பிறகு, மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தி.மு.கவில் இணையும் நிகழ்வுகள் தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக்கிறது.

என்ன உத்தரவாதம் கொடுத்து அவர்களை எல் லாம் கட்சியில் சேர்க்கிறார்கள் என்று தெரியவில் லை. பிற கட்சிகளில் ஆக்டிவாக இருப்பவர்கள் மட்டுமல்லாது அங்கே ஓரங்கப்பட்டவர்களை யும் தி.மு.கவுக்கு கூட்டிவந்து பிரதானப்படுத்துகி றார்கள். இவர்களில் பெரும்பாலானவர்களுக்கு வந்த வேகத்திலேயே கட்சிப் பதவிகளையும் கொடுக்கிறார்கள். இவர்களுக்காக, ஒரிஜினல் தி.மு.கவினரை டம்மி பொறுப்புகளுக்கு


மு.க.ஸ்டாலின்


உதயநிதி


ராஜீவ் காந்தி


தளபதி முருகேசன்

மாற்றுகிறார்கள். சிலரை பொறுப்புகளை விட்டும் தூக்குகிறார்கள்.

அ.தி.மு.கவைச் சேர்ந்த முன்னாள் எம்.பியான ஏ.பி.நாகராஜன், முன்னாள் மேயரான கணபதி ராஜ்குமார், முன்னாள் எம்.எல்.ஏவான ஆறுகுட்டி, முன்னாள் கவுன்சிலர் செந்தில் என்ற கார்த்திகேயன், தே.மு.தி.க முன்னாள் எம்.எல்.ஏ.வான தினகரன், முன்னாள் மக்கள் நீதி மய்ய நிர்வாகியான மருத்துவர் மகேந்திரன், நா.த.கவில் இருந்து வந்த ராஜீவ் காந்தி உள்ளிட்ட அனைவருமே கட்சியில் சேர்ந்த வேகத்தில் தி.மு.கவில் உயர்ந்த இடத்துக்கு உயர்த்தப்பட்டார்கள். கணபதி ராஜ்குமாரை தனது சிபாரிசில் எ.பியாகவே ஆக்கினார் செந்தில்பாலாஜி. ஆறுகுட்டியின் மகன் அசோக் கோவை வடக்கு மாவட்ட தி.மு.க துணைச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.


கணபதிராஜ்குமார்

2021 தேர்தலில் தி.மு.கவுக்கு எதிராக போட்டியிட்டு வாக்குகளை பிரித்த மகேந்திரன் இப்போது தி.மு.க ஐடி விங்க் மாநில இணைச் செயலாளராக இருக்கிறார். நா.த.க ராஜீவ்காந்தி தி.மு.க மாநில மாணவரணி செயலாளராக இருக்கிறார். தே.மு.தி.க வரவான தளபதி முருகேசன் இப்போது கோவை தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர். ஏன், இந்தப் பதவிக்கெல்லாம் காலங்காலமாக கட்சிக்காக உழைத்த அசல் தி.மு.கவினர் யாருமே லாயக்கில்லையா.? மாற்றுக் கட்சிகளில் இருந்து வந்தவர்களுக்கு தான் முன்னுரிமை தர வேண்டுமா.?


ஏ.பி.நாகராஜன்

முதல்வர் ஸ்டாலினோ, துணை முதல்வர் உதயநிதியோ மற்ற அமைச்சர்களோ கோவைக்கு வந்தால், அவர்களைப் பார்க்க எங்களுக்கு அனுமதி கிடைக்கிறதோ இல்லையோ மேற்கண்ட ஜம்பிங் மாஜிக்கள் எளிதாகச் சந்தித்து விடுகிறார்கள். அதேசமயம், இவர்களில் பலரும் செந்தில்பாலாஜி கோவைக்கு வரும்போது மட்டும் வந்து சீன் போட்டுவிட்டு மற்ற நேரங்களில் தங்களது வேலைகளைப் பார்க்கப் போய்விடுகிறார்கள்.


மகேந்திரன்

இந்தநிலையில், 2026 தேர்தலில் கோவையில் சீட் பிடிக்கவும் இந்த மாஜிக்களில் சிலர் இப்போது ஆள் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். இதில் சிலர், தங்களுக்கே சீட் கிடைத்துவிட்டது போல் கட்சியினர் மத்தியில் உருட்டிக்கொண்டும் இருக்கிறார்கள். இப்படி சீசனுக்கு வந்து போகிறவர்களை தேடிப்பிடித்து அரசு மற்றும் கட்சிப் பதவிகளுக்கு சிபாரிசு செய்வதால் காலங்காலமாக கட்சிக்காக உழைத்துத் தேய்ந்தவர்கள் எல்லாம் ஒதுங்க ஆரம்பித்துவிட்டார்கள். அவர்களை எல்லாம் உற்சாகப்படுத்தி உரிய அங்கீகாரத்தை அளிக்காமல் போனால் 2026 தேர்தலிலும் கோவையில் தி.மு.க தலைமை நினைப்பது சாத்தியமாகாமல் போய் விடும் என்றனர்.

தி.மு.க அமைச்சரவையை இப்போது நடத்திக் கொண்டிருப்பதே எங்கள் மாஜிக்கள் தான் என்று அ.தி.மு.கவினரே மார்தட்டும் போது, கோவைக்கு மட்டும் ஆத்திரப்பட்டு என்ன ஆகப் போகிறது.?

கட்சி வளர்த்த உடன்பிறப்புக்களுக்கு என்ன செய்ய போகிறார் ஸ்டாலின்.? ■

பொள்ளாச்சி | ஜேம்ஸ்

# டாஸ்மாக் பார் ஊழல்..? கண்டு கொள்ளாத திராவிட மாடல்..?

**கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் இருந்து சுமார் பதினைந்து கிலோமீட்டர் தொலைவில் உள்ளது கேரள எல்லைப் பகுதியான மீனாட்சிபுரம். இங்கு தமிழ்நாடு அரசு டாஸ்மாக் கடை ஒன்று இயங்கி வருகிறது (கடை எண்:2278). இந்த கடைக்கு கேரள மற்றும் தமிழ்நாடு என இரண்டு மாநில குடிமகன்களும் தினசரி ஆயிரக்கணக்கானோர் வந்து செல்கின்றனர்.**

மேற்படி கடையை யொட்டி எவ்வித உரிமமோ, அரசு அனுமதியோ, எதுவும் இல்லாமல் பார் ஒன்று செயல்பட்டு வருகிறது. குடிமகன்களின் வசதிக்கேற்ப 24 மணிநேரமும் தடையின்றி கள்ளத்தனமாக கூடுதல் விலைக்கு சரக்கு விற்கப்படும் இந்த பாரை,





சைடு டிஸ் உடன் விற்பனை





பாட்டில் பதுக்கல்



டாஸ்மாக் கடை

ஆளுங்கட்சி பிரமுகரான காய்கறி மார்க்கெட் தியாகு என்பவர் நடத்தி வருகிறாராம்.

இந்த கடைக்கு எதிராக தனியார் பார் ஒன்றும் செயல்பட்டு வருகிறது. எதிரில் டாஸ்மாக் பாரில் பிளாக் விற்பனை களைகட்டுவதால், தனியார் பார் ஓனர்கள் ஏக கடுப்பில் உள்ளனர்.


தியாகு

அனுமதி இல்லாமல் நடத்தும் பாரில், தண்ணீர், டம்ளர் கூல் ரிங்ஸ் மற்றும் தின்பண்டங்கள் என சைடிஸ்ட் விற்பனையில் ஒரு வருமானம். 24 மணிநேரமும் கள்ளத்தனமான சரக்கு விற்பனையில் ஒரு வருமானம் என பணத்தை வாரி குவிக்கும் காய்கறி தியாகு கட்சிக்காக ஒரு கடைக்கோடி தொண்டன் செய்யும் சிறிய அளவிலான செலவுகளை கூட செய்யாமல், வர்ரதெல்லாம் செந்தில் பாலாஜி குரூப்புக்கே போய் விடுகிறது. நான் என்ன செய்ய என்று கையை விரிக்கிறாராம்.

இதைப் பற்றி டாஸ்மாக் மேலாளரும் சரி, கட்சியின் மேல்மட்ட நிர்வாகிகளும் சரி, ஒருவரும் கண்டு கொள்வதாக தெரியவில்லை. எல்லாம் மாமூல் மயமோ என்று தான் கேட்க தோன்றுகிறது. எப்படியோ தேர்தல் நெருங்கி வரும் நேரத்தில் இது போன்ற விஷயங்களால் ஆளுந்தரப்புக்கு அடி விழாமல் இருந்தால் சரிதான் என புலம்புகின்றனர் பார்ட்டர் ஏரியா உடன் பிறப்புக்கள். ■

பரபரப்பு செய்தி

வெளியிட்டாளர்
& ஆசிரியர்
**S.P.இராமநாதன்**
**99405 14136**

இணையாசிரியர்
**ஜோதி சங்கர் .A**
**9444703555**

பொறுப்பாசிரியர்
**நா.இராதாகிருஷ்ணன்**

நிருபர்கள்
**ஜேம்ஸ் நெப்போலியன்**
**இராமநாதபுரம் முஸ்தபா**
**பொங்கு செல்வம்**
**தனசேகர்**
**திண்டுக்கல் குமார்**
**V.சங்கர்,**
**V.செல்வநாயகம்**
**K.மணிகண்டன்,**
**குமரிமைந்தன், பாக்யா,**
**வெங்கடேஷ்**

வடிவமைப்பு
**த.கோபாலகிருஷ்ணன்**

நிர்வாக அலுவலகம்
**கதவு எண்: 7/31, A - பிளாக்,**
**நெ.69, கிரிஸ்டல் கோர்ட்,**
**அண்ணா நகர்**
**சென்னை - 600 101**

தொடர்புக்கு
**044 - 26150095**

மின்னஞ்சல்
paraparappuseithiweekly@gmail.com

www.paraparappucheithi.com
paraparappucheithi
paraparappucheithi



# தெருநாய் கடிக்கு தீர்வென்ன..?

## உயிரிழப்புகள் தடுக்கப்படுமா?

**நாய்கள் நன்றிக்கு உரியது. பாசத்தை பொழிந்து தரும் பரிமளமானது. நாம் அவைகளுக்கு தரும்உணவை விட நம்மிடம்அவைகள் அதிகம் எதிர்பார்ப்பது பாசத்தைதான். உணவில்லாமல்லஉயிர் வாழ முடியாதுதான். ஆனால் உணவை விட உணர்வுகளுக்கு முக்கியத்துவம் தருவது நாய்களே!**

சில பேருக்கு நாய் என்று சொன்னாலே பிடிக்காது கோபப்பட்டு விடுவார்கள். பெயர்சொல்லி அழையுங்கள் என்றே சொல்வார்கள். அல்லது பைரவா என சொல்லச்சொல்வார்கள்.

தெருநாய்களுக்கு நாம்ஒரு வேளை உணவளித்தாலும் கூட அவை நன்றி மறக்காமல் நம்மைப்பார்த்ததும் வாலாட்டிக்கொண்டே நம்மை வாரிக்கொள்ள துடிக்கும். எத்தனை நாட்கள் கழித்து வந்தாலும் நம்மை அடையாளங்கண்டு வாலாட்டி அன்பைக்கொட்டும்.

ஆனால் பசியாலும், கல்லெறி படுவதாலும், சக நாய்களின் விரட்டல்களாலும் கோழிக்கால்களை அடிக்கடி உண்பதாலும் அவை ரேபிஸ் நோயால் தாக்கப்பட்டு வெறி ஏற்பட்டு கண்டவர்களையெல்லாம் கடித்துக்குதறி விடுகிறது. சமீபத்தில் டெல்லியில் தெருநாய்களை அப்புறப்படுத்தக்கூறிய நீதிபதிகள் திடீரென்று மனம் மாறி தெருநாய்களை அப்புறப்படுத்தாமல் விட்டு விடவும் நோய் பாதித்த நாய்களை மட்டும் பிடித்து உரிய சிகிச்சை அளித்தபின் பிடித்த இடத்திலேயே விட்டு விடவும் உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாட்டில் முன்னெப்போதுமில்லாத வகையில் நாய்க்கடி சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. சிறுவர்களை தெருநாய்கள் துரத்துவது, சூழ்ந்துகொண்டு கடிப்பது போன்ற சிசிடிவி காட்சிகளை காணும்போது நெஞ்சம் பதறுகிறது. இதுபோன்ற தெரு நாய்க்கடி சம்பவங்களை தடுக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிடக்கோரி அண்மையில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அப்போது சென்னையில் 1.80 லட்சம் தெருநாய்கள் இருப்பதாக சென்னை மாநகராட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டது. தெருநாய்களால் மட்டுமல்ல, பார்த்து பார்த்து பராமரிக்கப்படும் வீட்டு வளர்ப்பு நாய்களாலும் உயிரிழப்பு சம்பவங்கள் அரங்கேறுகின்றன. சமீபத்தில் சேலத்தில் வளர்ப்பு நாய் காலில் கடித்தும், தடுப்பூசி போடாமல் இருந்து வந்த நபர் ரேபிஸ் நோய் பாதித்து உயிரிழந்தார். இதுபோன்ற வளர்ப்பு நாய்களுக்கு பல்வேறு விதிகள் உள்ளன. நகராட்சி அல்லது மாநகராட்சியில் நாய் உரிமம் பெற வேண்டும். ஆண்டுதோறும் ரேபிஸ் தடுப்பூசி கட்டாயம் போட வேண்டும். பொது இடங்களில் அழைத்துச் செல்லும்போது கழுத்து பட்டை, வாய் கவசம் பயன்படுத்த வேண்டும். என்று தெரிவித்துள்ளார்

எஸ்.டி.பி.ஐ. கட்சியின் மாநில தலைவர் நெல்லை முபாரக் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது;

தமிழகத்தில் தெரு நாய்களால் ஏற்படும் பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்து, பொதுமக்களிடையே கடும் அச்சத்தையும் பதற்றத்தையும் ஏற்படுத்தி வருகின்றன. நாய்க்கடி சம்பவங்கள், ரேபிஸ் போன்ற உயிர்க்கொல்லி நோய்கள், சாலை விபத்துகள் மற்றும் சமூகப் பாதுகாப்பு குறித்த கவலைகள் மக்களிடையே பெரும் அச்சுறுத்தலை உருவாக்கியுள்ளன. கடந்த ஒரு ஆண்டில் மட்டும் 3.3 லட்சம் பேர் நாய்க்கடியால் பாதிக்கப்பட்டதாக அரசின்

புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. கிராமப்புறங்கள் முதல் நகர்ப்புறங்கள் வரை பரவலாக உள்ள இப்பிரச்சினை குழந்தைகள், முதியவர்கள் மற்றும் பெண்களை அதிகம் பாதிக்கிறது.

ரேபிஸ் 100 சதவீதம் உயிரிழப்பை ஏற்படுத்தக்கூடிய கொடிய நோயாகும். தெரு நாய்களின் கட்டுப்பாடற்ற இனப்பெருக்கமும், தடுப்பூசி இல்லாத நிலையும் இதனை மேலும் தீவிரப்படுத்துகின்றன. தெரு நாய்கள் சாலைகளில் திடீரென புகுந்து வாகன ஓட்டிகளுக்கு ஆபத்தை விளைவிப்பதால் விபத்துகள் ஏற்படுகின்றன. மேலும், பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள், தனியாக நடமாடும் முதியவர்கள், பெண்கள் மற்றும் இரவு நேரங்களில் வேலை முடிந்து திரும்பும் தொழிலாளர்கள் நாய்களால் தாக்கப்படும் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்கின்றன, இது மக்களின் அன்றாட வாழ்க்கையில் பயத்தை உருவாக்கியுள்ளது.

தெரு நாய்களால் ஏற்படும் பிரச்சினைகள் தமிழகத்தில் பொது சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சமூக நலனுக்கு பெரும் சவாலாக உள்ளன. மனிதாபிமான அணுகுமுறையுடன் உறுதியான நடவடிக்கைகள் அவசியம். கேரள அரசின் முன்மாதிரியைப் பின்பற்றி, தமிழக அரசு இப்பிரச்சினையை அவசரகால அடிப்படையில் அணுகுவதன் மூலம் மக்களின் உயிருக்கும் பாதுகாப்புக்கும் உத்தரவாதம் அளிக்க முடியும்.

இவ்வாறு அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தெரு நாய்களை தனிமைப்படுத்தி பாதுகாக்க வேண்டும் என்ற உச்சநீதிமன்ற தீர்ப்பை எதிர்ப்பவர்களில் பல வகையினர் உள்ளனர்.

1. சிக்கலின் தீவிரத்தன்மை குறித்து அறியாமல் வறட்டு கருணை பேசுபவர்கள்.
2. மனிதர்கள் மீது வெறுப்பாகி அந்த வெறுப்பை தணிக்க தெரு நாய்களை ஆயுதமாகக் கருதுபவர்கள்.
3. தெரு நாய் பெருக்கத்தால் பணப் பயனடையும் மருந்து நிறுவனங்களால் நியமிக்கப்பட்ட நாய் நல ஆர்வலர்கள்/ அமைப்புகள்.
4. அப்படிப்பட்ட நாய் நல ஆர்வலர்கள் / அமைப்புகளால் பரப்புரை செய்யப்பட்டு மூளைச் சலவை செய்யப்பட்டவர்கள்...

இவர்களின் போராட்டத்திற்கு பணிந்து நீதிமன்றங்கள் பொது மக்களை ஆபத்தான நிலையில் தொடர்ந்து கிடக்க அனுமதிக்கக் கூடாது...

இந்த நாய் தொல்லையால் பொதுமக்கள், குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகள் மிகவும் அஞ்சுகின்றனர்.

பொதுமக்களின் பாதுகாப்பு கருதி, எங்கள் பகுதியில் உள்ள தெரு நாய்களைப் பிடித்து, உரிய முறையில் அப்புறப்படுத்தி, வெறிநோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுத்து வருகிறது.

பெங்களூரில் 4 வயது சிறுமி தெருநாய்கள் கடித்ததில் பல நாள் சிகிச்சை பெற்று இறந்தார்.

சிகிச்சை முயற்சி - குடும்பம் 9-10 லட்சம் செலவழித்தும் காப்பாற்ற முடியவில்லை.

ரேபிஸ் உறுதி - வாந்தி, வலி அறிகுறிகள்; பின்னர் ரேபிஸ் நோய் கண்டறியப்பட்டது.

பெங்களூருவில் நடந்த பரிதாபகரமான சம்பவம் ஒன்று அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. 4 வயது சிறுமி நாய் கடியால் நீண்டநாள் சிகிச்சைக்குப் பிறகும் உயிரிழந்துள்ளார்.

பெங்களூரு, தாவணகேரே மாவட்டத்தைச் சேர்ந்த 4 வயது சிறுமி, வீட்டு வாசலில் விளையாடிக் கொண்டிருந்தபோது தெருநாய்கள் தாக்கியதில் கடுமையாக காயமடைந்தார். கடந்த ஏப்ரல் மாதம் நடந்த இந்த சம்பவத்திற்குப் பிறகு சிறுமி நீண்ட நாட்களாக சிகிச்சை பெற்று வந்தார்.

சிறுமி கதிரா பானு, தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றபின் சிறிதளவு நலம் அடைந்தார். ஆனால் சில வாரங்களுக்கு முன்பு உடல் நிலை மீண்டும் மோசமடைந்து, வாந்தி, வலி போன்ற அறிகுறிகள் தென்பட்டன. பின்னர், அவருக்கு ராபீஸ் (Rabies) ஏற்பட்டது தெரியவந்தது. பல மாதங்களாக போராடிய அவர், ஞாயிறு இரவு பெங்களூருவிலுள்ள ராஜீவ் காந்தி மருத்துவமனையில் உயிரிழந்தார்.

சிறுமியின் மாமா சாஜித் கூறுகையில், “அவளை காப்பாற்ற 910 லட்சம் ரூபாய் வரை செலவழித்தோம். எல்லா முயற்சிகளும் செய்தோம். ஆனாலும் உயிரை காப்பாற்ற முடியவில்லை. தாவணகேரே நகரத்தில் நிறைய தெருநாய்கள் சுற்றித் திரிகின்றன. அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மற்ற குழந்தைகள் இதுபோன்ற துயரத்துக்கு ஆளாகக் கூடாது,” எனக் கண்கலங்கியபடி தெரிவித்தார்.

இதேபோல் சமீபத்தில் பெங்களூருவிலுள்ள Dr.B.R. அம்பேத்கர் பல்கலைக்கழகத்தில் படிக்கும் இரண்டு மாணவர்கள் காலை நடைப்பயிற்சிக்குச் சென்றபோது தெருநாய்கள் கடித்த சம்பவமும் நடந்தது. ஜூலை மாதத்தில், 68 வயதான சீத்தப்பா என்பவர் வீட்டின் முன் சென்றபோது நாய்கள் தாக்கி உயிரிழந்தார். கடந்த ஆகஸ்ட் 2024இல், பெங்களூருவில் ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவரும் தெருநாய்கள் தாக்கியதில் உயிரிழந்திருந்தார்.

டெல்லி தெருநாய்களைக் காப்பகங்களில் அடைக்க உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவானது, இரக்கமற்றதும் குறுகிய பார்வை கொண்டதுமாகும் என மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கடுமையாகச் சாடியுள்ளார். தலைநகர் டெல்லியில் சுற்றித்திரியும் அனைத்துத் தெருநாய்களையும் எட்டு வாரங்களுக்குள் பிடித்து, காப்பகங்களில் அடைத்துப் பராமரிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. ஒரு நாய்கூட தெருக்களில் விடப்படக்கூடாது என்பதை உறுதி செய்யுமாறு டெல்லி அரசு மற்றும் மாநகராட்சி நிர்வாகங்களுக்குக் கடுமையாக

அறிவுறுத்தியுள்ள நீதிமன்றம், இந்த நடவடிக்கைக்கு இடையூறு செய்யும் தனிநபர்கள், விலங்கு ஆர்வலர்கள் அல்லது அமைப்புகள் மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்துள்ளது.

உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கடுமையாக விமர்சித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், 'டெல்லியில் உள்ள அனைத்து தெருநாய்களையும் அப்புறப்படுத்த வேண்டும் என்ற உச்ச நீதிமன்றத்தின் உத்தரவானது, மனிதாபிமான மற்றும் அறிவியல் அடிப்படையில் உருவாக்கப்பட்ட கொள்கைகளிலிருந்து பின்னோக்கிச் செல்லும் நடவடிக்கையாகும். இந்த வாயில்லா ஜீவன்கள் அழிக்கப்பட வேண்டிய சிக்கல் அல்ல; தெருநாய்களை ஒட்டுமொத்தமாக அகற்றுவது என்பது கொடூரமான, குறுகிய பார்வை கொண்ட, இரக்கமற்ற செயலாகும்.

அவற்றுக்கு உரிய தங்குமிடங்கள், கருத்தடை, தடுப்பூசி மற்றும் சமூகப் பராமரிப்பு போன்ற நடவடிக்கைகளின் மூலமே தெருக்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க முடியும்.

பொதுமக்களின் பாதுகாப்பையும் விலங்குகளின் நலனையும் ஒருசேரக் கொண்டுசெல்வதை உறுதிப்படுத்த வேண்டும்' என்றும் ராகுல் காந்தி தனது பதிவில் மேலும் தெரிவித்துள்ளார்.

பிட்புல் நாயால் சென்னையில் நேர்ந்த துயரம் யிகிதிதிணிஸிரிபிகிழிறிணிஜி ஞிளிநி நிமிஎவ்வளவு தடுத்தும் விடாமல் அந்த நாய் கருணாகரனின் தொடை மற்றும் உயிர்நாடியை கடித்துக் குதறியது. அக்கம் பக்கத்தினர் கூடியும் யாராலும் அவரை காப்பாற்ற முடியவில்லை என்கின்றனர் கருணாகரனின் உறவினர்கள்.

கருணாகரனின் உறவினர்கள், கருணாகரனின் கண்ணீர் அஞ்சலி போஸ்டர் எடத்துலேயே கருணாகரன் செத்துப்போயிட்டாரு " என்று சம்பவத்தை நேரில் பார்த்த பெண்மணி எச்சில் விழுங்கியபடி விவரித்தார்.

தமிழ்நாட்டில் முன்னெப்போதுமில்லாத வகையில் நாய்க்கடி சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. சிறுவர்களை தெருநாய்கள் துரத்துவது, சூழ்ந்துகொண்டு கடிப்பது போன்ற சிசிடிவி காட்சிகளை காணும்போது நெஞ்சம் பதறுகிறது. இதுபோன்ற தெரு நாய்க்கடி சம்பவங்களை தடுக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிடக்கோரி அண்மையில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அப்போது சென்னையில் 1.80 லட்சம் தெருநாய்கள் இருப்பதாக சென்னை மாநகராட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டது. தெருநாய்களால் மட்டுமல்ல, பார்த்து பார்த்து பராமரிக்கப்படும் வீட்டு வளர்ப்பு நாய்களாலும் உயிரிழப்பு சம்பவங்கள் அரங்கேறுகின்றன. சமீபத்தில் சேலத்தில் வளர்ப்பு நாய் காலில் கடித்தும், தடுப்பூசி போடாமல் இருந்து வந்த நபர் ரேபிஸ் நோய் பாதித்து உயிரிழந்தார். இதுபோன்ற வளர்ப்பு நாய்களுக்கு பல்வேறு விதிகள் உள்ளன. நகராட்சி அல்லது மாநகராட்சியில் நாய் உரிமம் பெற வேண்டும். ஆண்டுதோறும் ரேபிஸ் தடுப்பூசி கட்டாயம் போட வேண்டும்.

பொது இடங்களில் அழைத்துச் செல்லும்போது கழுத்து பட்டை, வாய் கவசம் பயன்படுத்த வேண்டும்.கருணாகரன் உறவினர்கள் மற்றும் கால்நடை மருத்துவர் ஷன்மதி பேட்டி (ETV Bharat Tamil Nadu) அது தவிர அபாயகரமான நாய் இனங்களை (ஜெர்மன் ஷெப்பர்ட், டாபர்மேன், ராட்வீலர், பிட்புல் போன்றவை) வளர்ப்பதற்கு அதிகப்படியான பாதுகாப்பு அவசியம். ஆனால், ஊருக்கு அபாயமானாலும் தங்களுக்கு செல்லம்தான் என நினைக்கும் உரிமையாளர்கள் பலர், ஆக்ரோஷ குணம் கொண்ட நாய்களை முயல் குட்டியை போல பாவித்து வளர்த்து வருகின்றனர்.சிதறி கிடந்த ரத்தத் துளிகள்அதன் ஒரு வெளிப்பாடாகத்தான் பிட்புல் வகை நாய் ஒருவரை கடித்து கொன்றுள்ளது. சென்னையின் மிக முக்கிய பகுதியான ஜாபர்கான்பேட்டையில் இந்த சம்பவம் நடந்திருப்பது கூடுதல் அதிர்ச்சி. அதைவிட முக்கியம் நாயால் கடிபட்டு இறந்தவர் அந்த நாயை எந்த வகையிலும் சீண்டவில்லை. அந்த தெருவில் நின்றிருக்கிறார். நாய் உரிமையாளர்களிடம் உரையாடி இருக்கிறார் அவ்வளவுதான். பிறகு எதற்காக அந்த நாய் அரக்கனாக மாறியது? என்பதை குறித்து அறிந்துகொள்ள சம்பவ இடத்திற்கு விரைந்தோம்.அங்கு கிடைத்த திகில் அனுபவம் மனதைவிட்டு இன்னமும் நீங்கவில்லை. உயிரிழந்த கருணாகரனின் வீடு அமைந்துள்ள

ஜாபர்கான்பேட்டை விஎஸ்எம் கார்டன் பகுதிக்கு சென்றோம். கருணாகரனை குதறி அகால மரணத்தை ஏற்படுத்திய பிட்புல் நாய் இருந்த வீட்டையும் பார்த்தோம். இயற்கையாவே ஆக்ரோஷ குணம் கொண்ட இதுபோன்ற நாயை வளர்க்க அந்த வீடு உகந்ததே இல்லை. அவ்வளவு சிறிய வீடு அது. இந்த வீட்டிலா அதை வளர்த்து வந்தார்கள்? என்ற கேள்வியோடு சம்பவம் நடந்த இடத்தை உற்று பார்த்தோம். கருணாகரனை நாய் கடித்துக் குதறிய இடத்தில் ரத்தம் சிதறி காய்ந்துபோயிருந்தது. ஏதோ ஒரு படுகொலை நடந்த இடத்தை ஆய்வு செய்தால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது எங்களது மனநிலை.பூங்கொடி வீட்டில் பிட்புல் நாய் கட்டப்பட்டிருந்த இடம்பூங்கொடி வீட்டில் பிட்புல் நாய் கட்டப்பட்டிருந்த இடம் (ETV Bharat Tamil Nadu) உயிர் போகும்வரை விடவில்லைஅங்கு கூடியிருந்த கருணாகரனின் உறவினர்களிடம் நம்மை அறிமுகம் செய்து கொண்டு பேச துவங்கினோம்.

அப்போது சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொல்லி நம்மிடம் பேச துவங்கிய தேவி, "இங்குள்ள பூங்கொடி தான் அந்த நாயை வளர்த்து வந்தார். சம்பவத்தன்று வீட்டில் உள்ள சோபாவில் அந்த நாய் கட்டப்பட்டிருந்தது. அப்போது, பூங்கொடிக்கும் அவருடைய மகனுக்கும் வீட்டில் சண்டை நடந்து கொண்டிருந்தது. அந்த சத்ததை

கேட்ட கருணாகரன், அவருடைய வீட்டிலிருந்து வெளியே வந்தார். பின்னர் பூங்கொடி மகனிடம், "ஏன் அம்மாவை இப்படி பேசுறனு?" கேட்டார். கருணாகரனின் சத்தத்தை கேட்ட அந்த நாய் கட்டியிருந்த அந்த இலகுவான சோபாவையும் தர தரவென இழுத்துக்கொண்டு வெளியே வந்தது. வாசலில் நின்றுகொண்டிருந்த கருணாகரனின் தொடையை கடித்து அப்படியே பிடித்துக் கொண்டது.

நானும், பூங்கொடியும் எவ்வளவோ முயற்சி செய்தோம் ஆனால், நாய் விடவே இல்லை. சிறிது நேரத்தில் கருணாகரன் அப்படியே சரிந்து விழுந்து இறந்துபோனார். அதுவரை அந்த நாய் அவரை விடவேயில்லை. பிறகு வீட்டின் உள்ளே அந்த நாயை பூங்கொடி அழைத்து சென்றவுடன் அது அவரையும் கடித்தது. அந்த நாய்க்கு சத்தம் போட்டால் பிடிக்காது. சத்தம் போட்டால் ஆவேசமாக ஆகிவிடும். அந்த வீட்டை கடந்து தான் என் வீட்டிற்கு செல்ல வேண்டும். அமைதியாக இருந்தால் எதுவும் செய்யாது. சத்தம் கேட்டால் குரைத்து கொண்டே இருக்கும்" என்றார். இறந்து போன கருணாகரன் உறவினர்கள் கூறுகையில், "சம்பவத்தன்று கருணாகரன் வீட்டில் உறங்கி கொண்டிருந்தபோது, பூங்கொடி வீட்டில் சத்தம் கேட்டு போய் பார்த்தார். அப்போது அந்த நாயும் குரைத்துள்ளது. திடீரென அந்த நாய் அவரை கடிக்க தொடங்கியது. எவ்வளவு தடுத்தும் விடாமல் அது கருணாகரனின் தொடை மற்றும் உயிர்நாடியை கடித்துக் குதறியது. அக்கம் பக்கத்தினர் கூடியும் யாராலும் அவரை மீட்கமுடியவில்லை. அந்த நாய் அவ்வளவு ஆவேசமாக இருந்தது. இறுதியாக மாநகராட்சி அதிகாரிகள் மிகவும் சிரமப்பட்டு நாயை பிடித்துச் சென்றனர். அந்த நாயிடம் ஏற்கெனவே பலர் கடி வாங்கியுள்ளனர். மேலும், நாய்குட்டிகளை கூட கடித்துள்ளது.

இதுகுறித்து நாய் வளர்க்கும் பூங்கொடியிடம் பலமுறை கூறியும் அவர் கண்டுகொள்ளவில்லை.போலீசார் விளக்கம்காவல் நிலையத்தில் புகார் அளித்தாலும், அவர்கள் மேம்போக்காக சொல்லிவிட்டு சென்று விடுவார்கள். அப்போதே முறையாக நடவடிக்கை எடுத்திருந்தால், ஒரு உயிர் போயிருக்காது. கருணாகரனின் இறப்புக்கு நியாயம் கிடைக்க வேண்டும். பூங்கொடி மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என கூறினர்.இதுகுறித்து குமரன் நகர் காவல் நிலையத்தில் நேரடியாக சென்று விசாரித்தோம். அங்கிருந்த காவல்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், " நாய் உரிமையாளர் பூங்கொடி மீது, பொறுப்பின்றி நடந்த செயலால் மரணம் ஏற்படுவது உள்ளிட்ட (106 (1),291 பிஎன்எஸ்) பிரிவின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. பூங்கொடி நாய்க்கடி காரணமாக, கேகே நகர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்டு வருவதால் அவருக்கு உடல்நிலை சரியான பிறகு சட்ட நடவடிக்கை தொடரும்" என தெரிவித்தார்.

ரேபிஸ் எச்சில் மூலமாக பரவும் என்பதால் நாய் கடித்த 24 மணி நேரத்திற்குள்ளாக ரேபிஸ் தடுப்பூசி போட்டுவிட வேண்டும். நாய் கடித்த உடனே கடித்த இடத்தை சோப்பு போட்டு 15 நிமிடம் வரை நன்றாக கழுவ வேண்டும். பிறகு அருகில் உள்ள மருத்துவமனைக்கு சென்று தடுப்பூசியை போட்டுக்கொள்ள வேண்டும்" என்றார்.சென்னை மாநகராட்சி அறிவிப்புஇந்த சம்பவம் நடைபெற்றதையடுத்து சென்னை மாநகராட்சி அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில், "இனிமேல் பொது இடங்களில் நாய்களை வெளியே அழைத்துச் செல்லும்போது கழுத்து பட்டையுடன் சேர்ந்த கயிறு (leash) மற்றும் வாய் கவசம் (muzzle) கட்டாயமாக பயன்படுத்தப்பட வேண்டும். இதை மீறுவோர் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், நாய்களின் உரிமம் (License) மற்றும் ரேபிஸ் தடுப்பூசி சான்றிதழ் காலாவதியில்லாமல் இருக்க வேண்டும். ஒரே நேரத்தில் ஒரு நாயை மட்டுமே பொது இடங்களுக்கு அழைத்துச் செல்ல வேண்டும்.

அதே நேரத்தில், ஆபத்தான மற்றும் தாக்குதல் இயல்புடைய நாய்களை (ஜெர்மன் ஷெப்பர்ட், டாபர்மேன், ராட்வீலர், பிட்புல் உள்ளிட்டவை) வளர்ப்பதை தவிர்க்க வேண்டும். பொதுமக்கள் பாதுகாப்பையும், நாய்க்கடி சம்பவங்களைத் தடுக்கவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" என கூறப்பட்டுள்ளது. பிராணிகளை வளர்ப்பது என்பது அவரவர் சொந்த விருப்பம். ஆனால், வளர்ப்பதை காட்டிலும் அவைகளால் மற்றவர்களுக்கு ஆபத்து ஏற்படாமல் பார்த்துக்கொள்வது தான் முக்கியம்.

தெருநாய்கள்துரத்தினால் ஓடாமல் மெதுவாக அதனை உச்கொட்டினால் ஒன்றும் செய்யாது. அதனை உற்று நோக்கக்கூடாது. அதனை கல்லெடுத்துஎறியக்கூடாது என்று அறிவுறுத்துகிறார்கள்

தெருநாய்களுக்கு உணவளிக்கா விட்டால் வெறி பிடிக்கிறது. கடித்துக்குதறுகிறது. இதனால் பாதிப்புஅதிகம்தான். ஆனால் நாய் கடித்தால் உடனே அதற்கான சிகிச்சையை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

எல்லாம் சரி. பச்சிளங்குழந்தைகளை கவ்விச்சென்று விடும் நாய்களை என்ன செய்வது? தவழ்ந்து விளையாடும் குழந்தைகளை கடித்துக்குதறும் நாய்களை என்ன செய்வது?

மூதாட்டிகளை கடித்து உயிரிழக்கச்செய்யும் நாய்களை என்னசெய்வது?

வெறி பிடிக்கும் நாய்களை எப்படி அறிந்துகொள்வது? அவைகளை எப்படி கடந்து செல்வது? நாய் கடித்தால் என்னென்ன உயிர்காக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பதுகுறித்து அரசாங்கம் விழிப்புணர்வு முகாம்களை நடத்த வேண்டும்.

நாய்க்கடிக்கான மருந்துகளை எப்போதும் தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும்.

செய்வார்களா? ■

# சீட்டுகேட்டு வர்றாங்கண்ணே!

## ● விருதுநகர், அருப்புக்கோட்டை தொகுதி நிலவரம்

**கடந்த பரபரப்பு செய்தி இதழில் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள சட்டமன்ற தொகுதிகளில் ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், சிவகாசி, சாத்தூர், திருச்சுழி ஆகிய தொகுதிகளில் "யாருக்கு சீட்டு? யாருக்கு வேட்டு?" என்ற தலைப்பில் தொகுதி லேட்டஸ்ட் நிலவரங்களைப்பற்றி எழுதியிருந்தோம்.**

இந்த இதழில் விருதுநகர், அருப்புக்கோட்டை தொகுதிகளில் யாருக்கு சீட்டு? என்பதை நேரடியாக ஆய்வு செய்து பார்ப்போம்.

### விருதுநகர்:

விருதுநகரில் ஜனதாதளம் சாரபில் ஏ.எஸ்.ஏ ஆறுமுகமும், காங்கிரஸ் சார்பில் சொக்கரும், ம.தி.மு.க சார்பில் வரதராஜனும் வென்றார்கள். ஒருமுறை வென்றவர் மறுமுறை வெல்ல மாட்டார்கள் என்ற 'செண்டிமென்ட்'டை உடைத்தவர் திமுகவின் தற்போதைய எம்.எல்.ஏ. வான ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்.

அவருக்கே மீண்டும் திமுகவில் சீட் தர வாய்ப்புஅதிகம். இருமுறை வென்ற ஏ.ஆர்.ஆர். சீனிவாசனுக்கு இம்முறை கடும்அதிருப்தி ஏற்பட்டுள்ளது. இவரை எதிர்த்து கடந்தமுறை பிஜேபி நின்றதால் வென்றாரே தவிர அதிமுக நின்றால் சீனிவாசனால் வெற்றி பெற முடியாது என்றும் பேச்சுகிளம்பி விட்டது. 2011 ல் அதிமுக வேட்பாளர் கலாநிதி உள்கட்சியின் உள்குத்தால் சொற்ப வாக்குகளில் தோற்கடிக்கப்பட்டார்.

கடந்த2021 சட்டமன்ற தேர்தலில் அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தின் சார்பில் கோகுலம்தங்கராஜ் என்ற பெரிய தொழிலதிபர் போட்டியிட்டு தோற்றார். பிறகு அவர் தி.மு.க.வில் இணைந்து விட்டார். நாடார் சமுதாயத்தைச்சேர்ந்த இவர் தொகுதியின் பல ஊர்களில் தேவாலயங்களை கட்டிக்கொடுத்துள்ளார். தான தர்மம் செய்வதில் பெயர் பெற்றவர். கட்சி மாறியதால் சீட் யோகம்போயே போச்சு என்கிறார்கள். ஆனால் மதுரை புறநகர் மாவட்டத்தில் சீட் கிடைக்காத உடன்பிறப்புகளும் விருதுநகரை குறி வைத்து தலைமையிடம் நேர்காணலில் முயற்சித்து வந்திருக்கிறார்கள்.

அதிமுகவில் சிவகாசி வடக்கு ஒன்றிய செயலாளராக இருக்கும் புதுப்பட்டி வி.ஆர்.கருப்பசாமி போட்டியிட சீட் கேட்கிறார். தேவர் சமுதாயத்தைச்சேர்ந்த இவர் நல்ல களப்பணியாளர். திறமையான பேச்சாளர். நீண்டகால கட்சி விசுவாசி. கூட்டணியில் முன்பு திறம்பட பணியாற்றி சஞ் சய்ராமசாமியை வெற்றி பெற வைத்தவர். மதிமுகவின் வரதராஜனையும், தேமுதிக அதிமுக கூட்டணியிருந்த போது முன்னாள் அமைச்சர் மாஃபா பாண்டியராஜனின் வெற்றிக்கும் முக்கிய உழைப்பாளியாக இருந்தவர். இப்போது முன்னாள் எம்.எல்.ஏ.வரதராஜன் அதிமுகவில் இருப்பது வி.ஆர். கருப்பசாமிக்கு கூடுதல் பலம். மாஃபா பாண்டியராஜனின் நாடார் சமுதாய ஓட்டுக்களை பெறுவதற்கு மாஃபா உதவுவார் என்பது நிச்சயம். முக்குலத்தோரின் விருதுநகர் 18 பட்டி ஓட்டுக்களை இவர் அப்படியே அள்ளிவிடுவார். முத்தரையர், யாதவர்,அருந்ததியர், கம்பளத்து நாயக்கர் வாக்குகள் மேலும் இவரை அதிக ஓட்டுக்களை பெற வைக்கும்.

விருதுநகர் டவுணில் 23 பூத்களில் அதிமுக ஓட்டுக்கள் கிடைக்கும். காங்கிரஸிலோ, தி.மு.க.விலோ, நாடார் வேட்பாளர் போட்டியிட்டால் அதிகமான பூத்களில் நாடாருக்கே கிடைக்கும். இதனால் காங்கிரஸில் முன்னாள் எம்.எல்.ஏ. ராஜாசொக்கர் சீட்கேட்கிறார்.

சிவகாசியில் திமுகவில் மேயர் சங்கீதா இம்முறை போட்டியிட்டால் விருதுநகர் காங்கிரஸ்6க்கே ஒதுக்கப்படும். இவருக்கு அடுத்தபடியாக மாவட்ட அவைத்தலைவராக இருக்கும் விஜயகுமரன் சீட் கேட்கிறார். கம்மவார் நாயக்கர் சமுதாயத்தைச்சேர்ந்தவர். ஆனால் விருதுநகர் கிராமங்களில் கம்பளத்து நாயக்கர்களே அதிகம். முன்னாள்அமைச்சரும் மாவட்ட செயலாளருமான ராஜேந்திரபாலாஜியின் நண்பர்.



கே.கே.எஸ்.எஸ்.ஆர்



வி.ஆர்.கருப்பசாமி



ராஜாசொக்கர்



சோலை எஸ்.சேதுபதி



ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன்



சங்கீதா இன்பம்



பாண்டுரெங்கன்



யோக.வாசுதேவன்

வழக்கறிஞர். ராஜேந்திரபாலாஜியின் சிபாரிசு கட்டாயம் விஜயகுமரனுக்கு உண்டு.

விருதுநகர் மாவட்டத்தில் அதிமுக கூட்டணியில் ராஜபாளையம் பிஜேபிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டால் விருதுநகர் தொகுதி அதிமுகவுக்கே ஒதுக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை.

அண்ணாமலை ஆதரவில் சீட்டை வாங்க இத்தொகுதியை பி.ஜே.பி. கிழக்கு மாவட்ட தலைவர் பாண்டுரெங்கன் முட்டி மோதுவார். ஆனால் அதற்கு வாய்ப்பு மிகவும்குறைவுதான். இவர் பணபலமிக்கவர். நாயுடு சமுதாயத்தை சேர்ந்தவர். மதுரை புறநகர் மாவட்டம் கப்பலூரில் அமைய உள்ள எய்ம்ஸ் மருத்துவமனைக்கு ஜல்லிகற்கள் வழங்க ஒப்பந்தம் பெற்ற பெரிய காண்டிராக்டர் பாண்டுரெங்கன்!

## அருப்புக்கோட்டை:

அருப்புக்கோட்டை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆரின் கோட்டை என்று சொல்வார்கள். ராட்சஷ பலங்கொண்ட இவரே மீண்டும் அருப்புக்கோட்டை தொகுதியின் திமுக வேட்பாளர். ஆனால் சென்ற நாடாளுமன்ற தேர்தலில் அதிமுக கூட்டணியில் தே.மு.தி.க.வேட்பாளராக போட்டியிட்ட பிரபாகரன் இத்தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் மாணிக்தாகூரை விட அதிக வாக்குகள் பெற்றதால் கே.கே.எஸ்.எஸ்.ஆருக்கு கிலி பிடித்துக்கொண்டது.

ஆனால் பொதுவான பார்வையாளர்களோ, எம்.பி.தேர்தல் என்பது வேறு. சட்டமன்ற தேர்தல் என்பது வேறு என்றுதான் மக்கள் பார்ப்பார்கள். தே.மு.தி.க. விரைவில் திமுக கூட்டணியில் சேரும் என்ற பேச்சிருப்பதால் சற்று தெம்பாக இருக்கிறார் அமைச்சர் என்று பேசுகிறார்கள். தேமுதிக + திமுக கூட்டணி அமைந்து விட்டால் கே.கே.எஸ்.எஸ்.ஆர் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவது உறுதி.

தவிர முன்னாள் நகர்மன்ற தலைவரும் இப்போதைய நகர்மன்ற தலைவரின் கணவருமான சிவப்பிரகாசம் கே.எஸ். எஸ்.ஆரின் தீவிர ஆதரவாளர். இவர் தேவாங்க செட்டியார்இனம் என்பதால் இச்சமுதாய வாக்குகளை இவர் அமைச்சருக்கு பெற்றுத்தருவார் என்று பேசுகிறார்கள்.

அதிமுகவில் முன்பு வெற்றியும் தோல்வியும் அடைந்த வைகைசெல்வன் இம்முறை இங்கு போட்டியிட வாய்ப்பில்லை என்றும் அப்படியே போட்டியிட்டாலும் வெற்றிபெற வாய்ப்பில்லை என்றே பேச்சிருக்கிறது. கட்சியிலும் இவருக்கு கடுமையான எதிர்ப்பு இருப்பதால் காஞ்சிபுரத்தில் போட்டியிடும் எண்ணத்தில் அங்கேயே 'டேரா' போட்டு வருகிறார்.



சித்ரா ஜெய்சங்கர்

அருப்புக்கோட்டை தொகுதியில் பல்லாயிரக்கணக்கில் கன்னடம் பேசும் தேவாங்க செட்டியார்கள் இருப்பதால் அதே இனத்தைச்சேர்ந்த அரசியலுக்கு புதுமுகமான மகளிரணியைச்சேர்ந்த டாக்டர் சித்ரா ஜெய்சங்கர் என்பவர் களமிறங்க காய்நகர்த்தி வருகிறார். கன்னடம் பேசும் சித்ராஜெய்சங்கர் சார்ந்த சமூகத்தவர்களுக்கு நகரில் 16 வார்டுகள் உள்ளது. இவர் அருப்புக்கோட்டை டெலிபோன் ரோட்டில் கிளினிக் நடத்தி வரும் டாக்டர் ஜெய்சங்கரின் மனைவி ஆவார். இவர் விருதுநகர் மாவட்ட அதிமுகவில் நீண்டகால விசுவாசியாக செயல்பட்டு வரும் ஸ்ரீராம் பாலகிருஷ்ணனின் மகள் ஆவார். ஸ்ரீராம்பாலகிருஷ்ணன் விருதுநகரில் ஜே.பி.லாட்ஜ் நடத்தி வருகிறார்.

சித்ராஜெய்சங்கரைத் தவிர முன்னாள் நகர செயலாளர் சக்திவேலின் மகளான கவுன்சிலர் ராமதிலகமும் சீட்பெற முயற்சித்து வருகிறார். இவர்முக்குலத்தோர் சமுதாயத்தைசேர்ந்தவர். பணபலமிக்கவர்.

தற்போது நகர செயலாளராக இருக்கும் சோலை எஸ்.சேதுபதியும் சீட் கேட்க வேகமெடுத்துள்ளார். ஆனால் இவர் கமுதி அருகே உள்ள ராமசாமி பட்டியைச்சேர்ந்தவர். இவருக்கு அருப்புக்கோட்டை வீரலட்சுமி நகரில் வீடு உண்டு.

அருப்புக்கோட்டை ஒன்றிய செயலாளர் யோக.வாசுதேவன் எடப்பாடிக்கு நெருக்கம் என்பதால் அவரும் கோதாவில் குதிக்கலாம். இவர் நாயக்கர் இனம்.

இவையெல்லாம் கள நிலவரமாக இருக்க.... அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆருக்கு வயதாகி விட்டதாலும் உடல்நிலை காரணத்தாலும் அவர் இதுதான் கடைசி தேர்தல்என்று சீட்டும் கேட்பார். ஓட்டும் கேட்பார். நோட்டும் இருப்பதால் களமிறங்கி வெல்ல இந்த வயதிலும் ஊர் ஊராக சுற்றிச்சுழல்கிறார்.

அவர் வெல்வாரா? வீழ்வாரா? என்பதை அறிய விருதுநகர் மாவட்டமே காத்துக்கொண்டிருக்கிறது. ■

மதுரை

பாக்யா

# குட்லாடப்பட்டி அருவி சீரமைக்கபடுமா..? கோடை வாசஸ்தலம் அமையுமா..?



குட்லாடம்பட்டி அருவி

## ● எதிர்பார்ப்பில் மதுரை மக்கள்

**மதுரை என்றால் நினைவுக்கு வருவது சங்கத் தமிழும், மணக்கும் மல்லிகையும்... கோவில் மாநகரான மதுரையில் ஆன்மீக நெறி பரப்பும் ஆலயங்கள் அளவிடற்கரியது. தமிழகத்தில் சென்னைக்கு அடுத்த பெரிய நகரம் மதுரைதான். ஆண்டு தோறும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் இங்கு வருகின்றனர். இங்கு 15 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள உலகப் புகழ்பெற்ற மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில், மகாத்மா காந்தி பயன்படுத்திய அரிய பொருட்கள் இடம்பெற்ற காந்தி மியூசியம், 58அடி உயரமும் 248 பெரிய தூண்கள் என அழகிய கட்டமைப்புடன் கூடிய திருமலை நாயக்கர் மஹால் உள்ளிட்டவை நகர் பகுதியை அலங்கரிக்கிறது.**

புறநகரில் அழகர் கோயிலில் விஷ்ணு ஆலயமான அழகுமலையான் கோயில் மற்றும் பழமுதிர் சோலை முருகன் கோயில், திருப்பரங்குன்றம் சுப்பிரமணியர் கோயில், குருவித்துறை குரு பகவான், சோழவந்தான் ஜெனகை மாரியம்மன் கோயில், திருவேடகம் ஏடகநாதர் கோயில் உள்ளிட்ட பல சிறப்பான ஆலயங்களும் உள்ளன. இதே போல் கீழக்குயில்குடி சமணர் மலை, ஆண்டு தோறும் நடைபெறும் சித்திரைத் திருவிழா, உலகப் புகழ் ஜல்லிக்கட்டு ஆகியவையும் மதுரைக்கு பெருமை சேர்ப்பவை.

இவைகள் தான் மதுரை மாவட்ட மக்களின் ஆன்மீகத்திற்கும், கலாச்சாரத்திற்கும் உரியதாய் விளங்கி வருகிறது.

ஆனால், பொழுது போக்கு என்றால் எப்போதாவது வரும் வைகை நீரில் குளியலாடுவது மட்டும் தான். அதே போல் பரவையில் உள்ள தனியாரின் அதிசய தீம் பார்க் சற்று ஆறுதல். வாடிப்பட்டி அருகில் குட்லாடம்பட்டியில் உள்ள தாடகை நாச்சியம்மன் அருவி ஒன்று தான்.

அதுவும் பல்வேறு காரணங்களால் பயன்பாடில்லாமல் கிடக்கிறது. சிறுமலை அடிவாரத்தில் அக்டோபர் முதல் டிசம்பர் வரை உள்ள மழைக்காலத்தில் மட்டுமே தண்ணீர் வரும் இந்த அருவி ஏழைகளின் குற்றாலம் என்றும் அழைக்கப்படுகிறது. ஆனால்



இடிந்து கிடக்கும் பாதை...

வனத்துறையினரின் கட்டுப்பாட்டில் உள்ள இந்த அருவிக்கு மலையடிவாரத்திலிருந்து சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல் மலைப்பாதையில் நடந்து தான் செல்ல வேண்டும். அதற்குரிய படிகள் பெயர்ந்தும், பாதுகாப்பு இல்லாமலும் இருப்பதால் சில வருடங்களாகவே வனத்துறையினர் அனுமதிப்பதில்லை. மேலும், பெண்கள் தனியாக குளிக்க, உடை மாற்ற உரிய வசதிகள் செய்யப்படவில்லை. போதை ஆசாமிகள் ஆங்காங்கே வீசி விட்டு செல்லும் பாட்டில்கள் பாதங்களை பதம் பார்க்கும் பரிதாப சூழல் உள்ளது. இவ்வாறு அடிப்படை வசதிகள், பாதுகாப்பில்லாத காரணத்தால், மதுரை மாவட்ட மக்களுக்கு ஆறுதலான ஒரே பொழுது போக்கான இவ்விடமும் பயனற்று கிடக்கிறது.

தமிழக அரசு குட்லாடப்பட்டி அருவி உள்ளிட்ட சில அருவிகளை சீரமைக்க, கடந்த வருடம் ரூபாய் 10 கோடியே 20 லட்சம் நிதி ஒதுக்கி சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும் என அறிவித்தது. ஆனால் இன்று வரை எந்த பணிகளும் நடைபெறவில்லை. எனவே, கடந்த 2018 ஆம் ஆண்டு கஜா புயலால் பாதிக்கப்பட்ட அருவிப் பகுதிகளை சீரமைத்து பாதுகாப்பான வசதிகளுடன் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்பது மதுரை மாவட்ட மக்களின் கோரிக்கையாக உள்ளது.



சோலார் பேனலுடன் வீடு...

இன்னும் ஒரு இடம் சுற்றுலா ஸ்தலமாக மட்டுமல்லாது ஊட்டி, கொடைக்கானல் போல் குளு குளு சீசன் அனுபவிக்க இதே பகுதியில் ஒரு வாய்ப்பு உள்ளது. அதாவது, குட்லாடம்பட்டி அருகே சிறுமலை அடிவாரத்தில் விராலிப்பட்டி என்ற ஊர் உள்ளது. இந்த ஊராட்சிக்குட்பட்ட மீனாட்சிபுரம் என்ற ஊர். அடிவாரத்திலிருந்து சுமார் ஏழு கிலோ மீட்டர் தூரம் மலை மேல் உள்ளது. இதற்கு கீழிருந்து காட்டுப் பாதையில் சிரமத்துடன் செல்ல வேண்டும். வாகனங்களில் செல்ல வேண்டும் என்றால் வாடிப்பட்டி, கொடை ரோடு, திண்டுக்கல், சிறுமலை வழியாக சுமார் 70 கிலோ மீட்டர் சுற்றி செல்ல வேண்டும். சுமார் 200 குடும்பத்தார் குடியிருக்கும் மீனாட்சிபுரத்தின் தட்ப வெப்ப நிலை கொடைக்கானல், ஊட்டி போல் மிக மிக குளுமையாக இருக்கும். மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு சொந்தமான நிலங்களில் உருவானதால் இதற்கு மீனாட்சி புரம் என்ற பெயர் வந்தது. இங்குள்ளவை எல்லாம் வரி கட்டும் அனுபவ பாத்தியதைக்கு மட்டுமே உரியது. குடியிருக்கலாம்,விவசாயம் செய்யலாம். ஆனால் விற்க முடியாது. இங்கு மிளகு, காபி, பலா உள்ளிட்ட மலைப்பிரதேச பயிர்கள் நன்கு விளையும். ஆங்காங்கே சிறு சிறு வீடுகளும், ஒரு துவக்கப்பள்ளியும் உள்ள இங்கு மின்சார வசதி கிடையாது. சுமார் 10 ஆண்டுகளுக்கு வருடங்களுக்கு முன்பு அப்போதைய மதுரை கலெக்டர் சுப்பிரமணியன், அப்போதைய சோழவந்தான் எம்.எல்.ஏ கருப்பையா உள்ளிட்டோர் அதிகாரிகளுடன் நேரில் சென்று பார்வையிட்ட பின் தான் இங்குள்ள வீடுகளுக்கு சோலார் விளக்குகள் வழங்கப்பட்டது. மலைப் பாதையிலும் செல்ல முடியாமல், நீண்ட தூரம் சுற்றிப் போகவும் முடியாமல் உள்ள சூழ்நிலைகளால், அதிகாரிகள் பெரும்பாலும் இங்கு செல்வதில்லை.ஊராட்சி மற்றும் தாலுகா அலுவலகங்களுக்கு வருவதென்றால் இவ்வூர்

மக்கள் விராலிப்பட்டி மற்றும் வாடிப்பட்டிக்கு 70 கிலோ மீட்டர் தூரம் பயணம் செல்ல வேண்டிய அவலநிலை உள்ளது.

எனவே இப்பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வாக விராலிப்பட்டி மலையடிவாரத்திலிருந்து மீனாட்சிபுரத்திற்கு சாலை அமைக்க வேண்டும். இதனால் இவ்வூர் மக்களுக்கு எளிதான போக்குவரத்து மட்டுமன்றி, மின்சார வசதி, உள்ளிட்ட அனைத்து வசதிகளும் கிடைக்கும். மேலும், வாடிப்பட்டி யிலிருந்து சுமார் 20 கிலோ மீட்டர் தூரத்திலும், மதுரையிலிருந்து சுமார் ஐம்பது கிலோ மீட்டர் தூரத்திலும் குளு குளு மீனாட்சிபுரத்திற்கு எளிதான பயணம் மேற்கொள்ளலாம்.

சுற்றுலா பொழுது போக்கிற்கும், மன நிம்மதிக்கும் மதுரை மக்களுக்கு அரிய கோடை வாசஸ்தலம் கிடைக்கும். கடந்த தி.மு.க ஆட்சியில் கலைஞர் முதல்வராக இருந்த காலத்தில், இத்தொகுதி எம்.எல்.ஏவாக இருந்த தற்போதைய வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி இதற்கான முயற்சியில் ஈடுபட்டார். ஆட்சி மாற்றம், வனத்துறையின் அனுமதியின்மை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் அது கைவிடப்பட்டது.தற்போதைய ஆட்சியாளர்களும், அதிகாரிகளும் இதை நிறைவேற்றிக் கொடுத்தால் வரலாற்றில் அவர்கள் பெயர் பொன் எழுத்துக்களில் பொறிக்கப்படும்.

இதே போல் அருவிக்கு சென்று வர தேவையான அடிப்படை தேவைகளை செய்து உரிய பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும். இவ்விரு பணிகள் முடிந்தால் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் அதிகம் வருவர். சுற்றுலாத்துறை வளர்ச்சி பெறும். கொடைக்கானலை போல் கோடை வாசஸ்தலத்திற்குரிய அனைத்தும் உருவாகும். ஒரு நாள் விடுமுறையைக் கூட குடும்பத்துடன் கழிப்பதுடன், கால விரயமும், பண விரையமும் குறையும்.

ஆனால், வனத்துறை அனுமதிக்க மாட்டார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்த வருந்தத்தக்க தகவல். இதே போல் வனத்துறை தடுத்திருந்தால்,ஊட்டி, கொடைக்கானல் போல மலைகளில் கோடை வாசஸ்தலங்கள் உருவாகி இருக்குமா .?

வன விலங்குகளும் பாதுகாக்கப்படனும். மக்களும் பயன்பெறனும்... எனவே, அரசு மனது வைத்தால் இவை அனைத்தும் எளிதானது தான். முதல்வர் மு.க.ஸ்டாலின் அனுமதியுடன் இப்பகுதியின் அமைச்சர்கள் பி.மூர்த்தி, பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் இதை நிறைவேற்றிக் தருவார்கள் என்ற நம்பிக்கையில் உள்ளனர் மதுரை மக்கள்..

அமைச்சர் பி.மூர்த்தி தற்போது கிழக்கு தொகுதியில் வெற்றி பெற்றாலும், இன்னும் சோழவந்தானின் செல்லப்பிள்ளை என்று தான் பொதுமக்கள் அழைக்கின்றனர். அந்த அளவு சோழவந்தான் எம்.எல்.ஏ வாக இருந்த போது பல அரிய திட்டங்களை செயல்படுத்தி சாதனை புரிந்தார். அதே போல் இதையும் சாதித்து காட்டுவார் என்பது அனைவரின் நம்பிக்கையாக உள்ளது. சோழவந்தான் எம்.எல்.ஏ வெங்கடேசன்,

மதுரை ஆட்சியர் பிரவீன் குமார் மற்றும் அரசு அதிகாரிகளும் இதற்கான துறை ரீதியான பணிகளை முடுக்கி விட வேண்டும் என்று வேண்டுகோளுடன் காத்திருக்கின்றனர் மதுரை மாவட்ட மக்கள். ■



அமைச்சர் பி.மூர்த்தி



அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன்



எம்.எல்.ஏ வெங்கடேசன்



கலெக்டர் பிரவீன் குமார்

Owned, Published and Printed by: S.P. RAMANATHAN, at No. 3-224/1, Musuvanuthu, Dindigul, Tamilnadu – 624619. and Printed at CHENNAI OFFSET PRINTERS, No. 19/1,21/2, Kitabathkhan Bahadur Street, Ellis Road, Chennai – 600002. EDITOR: S.P. RAMANATHAN
All rights reserved. Legal jurisdiction Chennai city court only. Nothing in Paraparappu Cheithi is intended to defame any person. But expressed in faith, pursuit of truth and public good.

# மதுரை வடக்கில் மல்லுக்கட்டும் வி.ஐ.பிக்கள்..!

## சூடுபிடிக்கும் தேர்தல்களம்..!

**சட்டமன்ற தேர்தலுக்கு தமிழ்நாடு தயாராகி வரும் நிலையில் தமிழகத்தின் மையப் பகுதியான மதுரையில் தேர்தல் போட்டி சூடு பிடித்திருக்கிறது. குறிப்பாக முக்கிய தொகுதியான மதுரை வடக்கு சட்டமன்ற தொகுதியில் தற்போதியிலிருந்தே தேர்தல் வேலைகளை துவக்கி இருக்கின்றனர் தி.மு.க, அ.தி.மு.க நிர்வாகிகள். தி.மு.க தரப்பில் தளபதி, சௌந்தர், அ.தி.மு.க தரப்பில் சரவணன், பா.ஜ.க தரப்பில் சீனிவாசன் ஆகியோர் போட்டியிட தயாராகி வருகின்றனர்.**

தேர்தலுக்கு இன்னும் ஒரு ஆண்டு இருந்தாலும் தற்போது வேலைகளை துவக்கி விட வேண்டும் என ஆர்வம் காட்டுகின்றனர் அரசியல் கட்சியினர். வழக்கம்போல தி.மு.கவும், அ.தி.மு.கவும், பூத் கமிட்டி கூட்டங்கள், ஆர்ப்பாட்டம், போராட்டம் என கள அரசியல் செய்து வருகின்றனர்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கும் மூத்த முன்னோடிகள் தங்கள் தொகுதிகளில் கவனம் செலுத்தி வருகின்றனர். அந்த வகையில் மதுரை மாவட்டத்தில் இருக்கும் 10 தொகுதிகளிலும் தேர்தல் வேலைகள் சூடு பிடித்திருக்கிறது. ஏறக்குறைய தேர்தலுக்கு 10 மாதங்கள் இருக்கும் நிலையில் அ.தி.மு.க நிர்வாகிகள் தொண்டர்களை உற்சாகப்படுத்த பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர்.

மதுரையை பொறுத்தவரை 10 சட்டமன்ற தொகுதிகள் இருக்கிறது. 10 ஆண்டுகள் ஆட்சியில் இருந்த போதும் அதிருப்தி நிலவிய போதும் 2021 சட்டமன்ற தேர்தலில் தி.மு.கவும் அ.தி.மு.கவும் ஐந்து ஐந்து தொகுதிகளை பகிர்ந்து கொண்டது. அந்த அளவுக்கு மதுரை தி.மு.கவுக்கும், அ.தி.மு.கவுக்கும் சம அளவில் ஆதரவாக இருக்கிறது. அதேபோன்று மதுரை மாவட்டத்தை பொருத்தவரை தமிழக அளவில் பிரபலமான பல முக்கிய முகங்கள் இருக்கின்றனர்.



உதயநிதியுடன் சௌந்தர்

தி.மு.க தரப்பில் அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், அமைச்சர் மூர்த்தி, எம்.எல்.ஏ தளபதி, அ.தி.மு.கவில் ஆர்.பி.உதயகுமார், செல்லூர் ராஜூ, ராஜன் செல்லப்பா, டாக்டர் சரவணன் என பலமான வேட்பாளர்கள் இருக்கிறார்கள். கூடுதலாக நாம் தமிழர், தமிழக வெற்றிக் கழகத்தின் வேட்பாளர்களும் களமிறங்குவார்கள். இந்த நிலையில் மதுரை வடக்கு சட்டமன்ற தொகுதியில் தற்போதே வேட்பாளர்கள் களம்இறங்க துவங்கி இருக்கின்றனர்.

தொகுதி மறுசீரமைப்பிற்கு முன்பவரை மதுரை வடக்கு தொகுதி என்ற ஒரு தொகுதியே மதுரை மாவட்டத்தில் இல்லாமல் இருந்தது. 2011ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில்தான் இந்த தொகுதி உருவாக்கப்பட்டது. அதற்கு முன்புவரை இந்த தொகுதியின் பெரும்பாலான பகுதி மதுரை மேற்கு தொகுதியில் இணைந்து இருந்தது. மீதியுள்ள பகுதிகள் தெற்கு, சமயநல்லூர் தொகுதிகளில் இருந்தது.

இந்த தொகுதியில் மாநகராட்சி வார்டுகள் 2 முதல் 8 வரையும், 11 முதல் 15 வரையும் மற்றும் 17 முதல் 20 வரையும் உள்ள

பகுதிகள் உள்ளன. ரிசர்வ் லைன், தல்லாக்குளம், டி.ஆர்.ஓ காலனி, செல்லூர், பீபீ.குளம், மேலமடை, கோரிப்பாளையம், கே.கே.நகர், அண்ணாநகர், கோமதிபுரம், மேலமடை, உள்ளிட்ட முக்கிய நகரப் பகுதிகள் இத்தொகுதியில் இடம் பெற்றுள்ளன.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முதல் மாவட்ட நிர்வாகத்தின் அனைத்து அரசு அலுவலகங்களும், மதுரையின் அடையாளமான உலக தமிழ்ச்சங்கம், காந்திமியூசியம், அரசு சட்டக்கல்லூரி, மாவட்ட நீதிமன்றம், அரசு தொழிற்பயிற்சி நிலையம் உள்ளிட்ட முக்கிய இடங்கள் இத்தொகுதியில் உள்ளன.

இந்தத் தொகுதியில் அரசு ஊழியர்கள், பணக்காரர்கள், நடுத்தர மக்கள் அதிகம் உள்ளனர். மிகக் குறைவாகவே அடித்தட்டு மக்கள் வசிக்கின்றனர்.

மதுரை வடக்கு சட்டமன்றத் தொகுதியை பொறுத்தவரை சிறுபான்மையினர், யாதவர், பிள்ளைமார், முதலியார், முக்குலத்தோர், சவுராஷ்டிரா என அனைத்து சமுதாயத்தினரும் பரவலாக வசிக்கும் பகுதியாகும். மதுரையின் முக்கியப் பகுதிகளை இந்த தொகுதி உள்ளடக்கியிருப்பதால் இங்கு போட்டியிட தி.மு.க, அ.தி.மு.க உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளிலும் அந்தந்த கட்சிகளை சேர்ந்த வி.ஐ.பி.க்கள் களமிறங்க விரும்புகிறார்கள். மதுரை வடக்கு தொகுத் உறுவாக்கப்பட்டபின்பு நடைபெற்ற மூன்று சட்டமன்ற தேர்தல்களில் இரண்டு முறை அ.தி.மு.கவும், ஒரு முறை தி.மு.கவும் வெற்றி பெற்றுள்ளது.

வரும் தேர்தலில் தி.மு.கவைவை பொறுத்தவரை தற்போதைய சிட்டிங் எம்.எல்.ஏ.வும், மதுரை மாநகர் மாவட்டச் செயலாளருமான தளபதி மீண்டும் போட்டியிடுவார் என எதிர்பார்க்கபடுகிறது. இதனிடையே இளைஞரணியை சேர்ந்த ஒருவருக்கு இந்த முறை வாய்ப்பு வழங்கப்படும் என்ற பேச்சும் தொகுதிக்குள் பரவுவதால், எம்.எல்.ஏ. சீட் ரேஸில் மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க



எம்.எல்.ஏ தளபதி



டாக்டர் சரவணன்



சீனிவாசன்

இளைஞரணி அமைப்பாளரான சவுந்தரும் இடம் பிடித்திருக்கிறார். இதேபோல் அமைச்சர்கள் மூர்த்தி, பழனிவேல் தியாகராஜன் ஆதரவாளர்கள் சிலரும் இந்த தொகுதியை குறிவைத்துள்ளனர். தி.மு.கவில் இப்படி பலரும் சீட்டை எதிர்நோக்கி ஓடிக்கொண்டிருக்கும் வேளையில், காங்கிரஸ் கட்சிக்கும் மதுரை வடக்குத் தொகுதி மீது ஒரு கண் இருக்கிறது. ஏனெனில், ஏற்கனவே இந்த தொகுதியில் காங்கிரஸ் களமிறங்கியிருப்பது கவனிக்கத்தக்கது.

அ.தி.மு.க பா.ஜ.க கூட்டணியை பொறுத்தவரை மதுரை வடக்கு சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட டாக்டர் சரவணன், பேராசிரியர் சீனிவாசன் ஆகியோர் கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். கூட்டணியில் தொகுதியை பா.ஜ.கவுக்கு கொடுத்துவிடக் கூடாது என்பதில் டாக்டர் சரவணன் தரப்பு முனைப்பாக பணியாற்றிக் கொண்டிருக்கிறது. டாக்டர் சரவணனும் தற்போதே தேர்தல் பணிகளை துவங்கி விட்டார். ஆனால் பா.ஜ.கவோ இந்த முறை மதுரை வடக்கை அ.தி.மு.க கூட்டணியில் கேட்டுப் பெற வேண்டும் என்பதில் உறுதியாக நிற்பதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழக வெற்றிக்கழகத்தை பொறுத்தவரை அக்கட்சியின் மாவட்டச் செயலாளரான விஜய் அன்பன் கல்லாணை என்பவர் போட்டியிடலாம் என சொல்லப்படுகிறது. நாம் தமிழர் கட்சியை பொறுத்தவரை கடந்த 2021 தேர்தலில் போட்டியிட்ட செந்தில்குமார் மீண்டும் களமிறங்கலாம் என சொல்லப்படுகிறது. அதேநேரத்தில் முதன்முறையாக மதுரை வடக்கு தொகுதியில் நாம் தமிழர் கட்சி சார்பில் பெண் வேட்பாளரை களம் இறக்கும் திட்டத்திலும் சீமான் இருக்கிறார் என்கின்றனர்.

தற்போதைய நிலவரப்படி தி.மு.க சார்பில் சிட்டிங் எம்.எல்.ஏ தளபதியும், அ.தி.மு.க சார்பில் டாக்டர் சரவணனும் தான் களமிறக்கபடுவார்கள் என்பது தான் களநிலவரமாக உள்ளது. ■